# பகுதி IV

# பகுதி IV


| | பக்கம் |
|---|---|
| 1. 2008ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் | I |
| 2. 2008ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் | I |
| 3. 2008ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | I I |
| 4. 2008ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் | IV |
| 5. 2008ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம் | VI |
| 6. 2008ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் | VII |
| 7. 2008ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, பிரதேசிய சங்வர்தனை வங்கிச் சட்டம் | XII |
| 8. 2008ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகம் (திருத்தச்) சட்டம் | XXI |

## 2008 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நிதி(திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நிதி (திருத்தம்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்து நாலாம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் அச்சட்டத்தின் பாகம் II இல் (செலூலர் செல்லிடத் தொலைபேசிச் சந்தாதாரர் அறவீடு சுமத்தல்) "செல்லிடத் தொலைபேசி" என்னும் சொற்கள் அப்பாகத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் "செல்லிட அல்லது கம்பித் தொடர்பற்ற நிலத் தொலைபேசி" என்னும் சொற்களை பதிலிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2008 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, நிதி (திருத்தம்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னா் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டமானது, அந்தச் சட்டத்தின் I ஆம் பாகத்தின் (சமூகப் பொறுப்புடைமை அறவீட்டு விதிப்பனவு) 2 ஆம் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

1. அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியினை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(ஆ) 2006, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் 2007, திசெம்பா் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கு 1 சதவீதப்படியும்; அத்துடன்

(இ) 2008, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலப்பகுதிக்கு 1.5 சதவீதப்படியும் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்."; அத்துடன்

2. அப்பிரிவிற்கான இரண்டாவது காப்பு வாசகத்தினை நீக்கஞ் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருதனை இடுவதன் மூலமும்:-

"ஆயின் மேலும் -

(அ) 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், வருமான வரியின் மீது இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அறவிடற்படற்பாலதான சமூகப் பொறுப்புடைமை அறவீடானது 2006, சனவரி 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் 2006, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதி தொடா்பில் 0.25 சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், வருமான வரியின் மீது இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அறவிடற்படற்பாலதான சமூகப் பொறுப்புடைமை அறவீடானது -

(i) 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குவதும் 2008, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதி தொடா்பில் 1.0 சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.

(ii) 2008, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலப்பகுதி தொடர்பில் 1.5 சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும்.”

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவு உட்பகுத்தப்படுகின்றது என்பதுடன் அச்சட்டவாக்கத்தின் 6அ என்னும் பிரிவாக பயனுறுதலும் வேண்டும்.

“இப்பாகத்திற்கான பொருள் கோடல்.

6அ. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக -

“கம்பெனி” என்பது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் உள்ளவாறு அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.”

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் I ஆம் அட்டவணையானது அதன் 5 ஆம் விடயத்திற்கு பின்வரும் புதிய விடயத்தைப் பதிலிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“5. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டம் (அத்தியாங்கள் XVI, XVII, XXI மற்றும் பிரிவுகள் 36, 65 என்பவற்றின் ஏற்பாடுகளைத் தவிர) 2006, ஏப்பிறல் 1 ஆம் திகதி தொடங்குவதும் 2008, மாச்சு 31 ஆம் திகதி முடிவடைவதுமான காலப்பகுதிக்கு அத்தகைய சட்டம் ஏற்புடையதாகுகின்றவாறாக அந்தளவில்;

6. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டம் (அத்தியாயங்கள் XVI, XVII, XXI மற்றும் பிரிவுகள் 36, 65 என்பவற்றின் ஏற்பாடுகள் தவிர, 2008, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு ஏதேனும் கம்பனிக்கு அத்தகைய சட்டம் ஏற்புடையதாகுகின்றவாறாக அந்தளவில்.”

5. கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன் -

(அ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கும் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2008, சனவரி 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற்கும் செய்யப்பட்ட திருத்தமும் இச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால், முதலாவது அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தமும் 2008, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

6. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. (1) இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்கும் 2008, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2. (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 6 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் “கடன் அட்டை வைத்திருப்பவரால்; அத்துடன்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “கடன் அட்டை வைத்திருப்பவரால்”; என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன் -

(2) (ஈ) என்னும் பந்தியினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஈஈ) பிரசித்த நொத்தாரிசாக செயலாற்றுவதற்கான ஆணைப்பத்திரம் ஒன்றின் விடயத்தில் நொத்தாரிசு பதவிக்கு விண்ணப்பிக்கின்ற ஆளினால்;

(ஈஈஈ) உரிமம் ஒன்றின் விடயத்தில் அதற்கு விண்ணப்பிக்கின்ற ஆளினால்; அத்துடன்".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்படுகின்றது என்பதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"முத்திரைத் தீர்வையை கொடுப்பனவு செய்யும் முறை.

8. (1) ஏழாம் பிரிவின் நியதிகளின்படி முத்திரைத் தீர்வை ஒருங்கு கூட்டப்பட்டாற்றவிர ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சாதனத்தின்மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வை, சாதனத்தை எழுதி நிறைவேற்றுவதற்கு முன்னர் அல்லது எழுதி நிறைவேற்றும் நேரத்தில் தேவைப்படுத்தப்பட்ட பெறுமதிக்கான ஒட்டுமியல்புடைய முத்திரைகளை ஒட்டுவதன் மூலம் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வையின் பெறுமதி, அவ்வாறு எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனத்தின் முகப்பில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படும் பங்குக் கைமாற்றங்கள் அவை எழுதி நிறைவேற்றப்படுவதிலிருந்து ஒரு மாதத்தினுள் முத்திரையிடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அசையா ஆதனத்தின் ஈடு அல்லது குத்தகை ஒன்று தொடர்பில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சாதனம் மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வை விதித்துரைக்கப்பட்ட வங்கி ஒன்றுக்கு குறித்துரைக்கப்பட்ட சாதனத்தின் எழுதி நிறைவேற்றுவதற்கு முன்பாக அல்லது எழுதி நிறைவேற்றப்படும் நேரத்தில் செலுத்தப்படலாம். ஆயினும், எந்த ஆளினால் முத்திரைத் தீர்வை செலுத்தப்படற்பாலதாகவுள்ளதோ அந்த ஆளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாலுள்ள காரணங்களால் முத்திரைத் தீர்வை அவ்வாறு செலுத்தப்படமுடியாதுள்ளவிடத்து, அம்முத்திரைத் தீர்வை யானது, அத்தகைய எழுதி நிறைவேற்றத் தேதியிலிருந்து ஏழு நாட்களினுள் விதித்துரைக்கப்பட்ட வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அதன் மேல் வங்கியானது முத்திரைத் தீர்வை முறையாக செலுத்தப்பட்டுள்ளதென சான்றுறுதிப்படுத்துகின்ற விதித்துரைக்கப்பட்ட படிவம் ஒன்றில் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சான்றிதழானது அவ்வாறு எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்.

(3) குறித்துரைக்கப்பட்ட சாதனம் ஒன்றை எழுதி நிறைவேற்றுகின்ற எவரேனுமாள் அச்சுப்பதிவு முத்திரை ஒன்றினால் முத்திரையிடப்படாத அத்தகைய குறித்துரைக்கப்பட்ட சாதனத்தின் எழுதி நிறைவேற்றலின் போது மீண்டும் அம் முத்திரைகள் பயன்படுத்தப்படுவதைத் தடுக்கும் வாயிலாக ஒவ்வொரு முத்திரையிலும் தனது பெயரை அல்லது முதல் எழுத்துக்களை எழுதுவதன் மூலம் அல்லது அதன் மீது மையினால் அடையாளமிடுவதன் மூலம் அல்லது குறுக்குக் கோடிடுவதன் மூலம் அதன் மீதான முத்திரைகளை இரத்துச் செய்தல் வேண்டும். மேலும், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட சாதனம் ஐம்பது ரூபா அல்லது மேற்பட்ட பெறுமதியுடைய ஒட்டுமியல்புடைய முத்திரை ஒன்றைத் தன்னகத்தே கொண்டிருக்குமிடத்து, அத்தகைய முத்திரை, அதில் உருவத்துளையிடுவதன் மூலம், ஒன்றில் வெட்டிவிடுவதன் மூலம் அல்லது பொருத்தமான சாதனம் ஒன்றினால் முத்திரையை துவாரமிடுவதன் மூலம் குறித்துரைக்கப்பட்ட சாதனத்தை எழுதி நிறைவேற்றுகின்ற ஆளினால் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் தரப்பட்ட முறையில் இரத்துச் செய்யப்படாதுள்ள ஒட்டுமியல்புடைய முத்திரை ஒன்றைத் தன்னகத்தே கொண்டிருக்கின்ற ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட சாதனம் அத்தகைய முத்திரையின் பெறுமதியின் அளவிற்கு முத்திரையிடப்படாதிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்."

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்காக பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும்:

ஆயினும், இச்சட்டத்தினதும் இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களினதும் முரண்பாடு எது எப்படியிருப்பினும், எவையேனும் பொருட்கள் அல்லது பண்டங்களின் ஏற்றுமதியில் இருந்து 2008, ஏப்பிறல் 1ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழுகின்ற மொத்த விற்பனவு வரவு தொடர்பில் விதிக்கப்படற்பாலதான பொருளாதாரச் சேவை விதிப்பனவுகளின் வீதம் 0.25 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "அவ்வளவிற்குக் கழிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்காக பின்வரும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது -

"அவ்வளவிற்குக் கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயினும், 2006 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் இயைபான வரி மதிப்பீட்டாண்டுக்கு செலுத்தப்படற்பாலதான இயைபான வருமான வரியிலிருந்து இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அதனது கழிப்பனவுகளின் பின்னர் 2004ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் Iஇன் ஏற்பாடுகளுக்கு இணங்க செலுத்தப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவின் ஏதேனும் தொகை 2006, மாச்சு 31 ஆந் தேதியன்று உள்ளவாறாக மீதி மிச்சமிருக்குமிடத்து, -

(அ) அத்தகைய தொகை 2005 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைந்த வரி மதிப்பீட்டாண்டுக்கு செலுத்தப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவின் ஏதேனும் பாகத்தை உள்ளடக்கியிருப்பின், அத்தகைய பாகம் 2006 ஆம் ஆண்டின் மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைந்த அவ் வரி மதிப்பீட்டாண்டினை உடன் அடுத்துறும் வரிமதிப்பீட்டின் மூன்று ஆண்டுகளினுள் வருகின்ற வரி மதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் பங்கிடப்படலாம்.

(ஆ) அத்தகைய தொகை 2006 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைந்த வரி மதிப்பீட்டாண்டுக்கு செலுத்தப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவின் ஏதேனும் பாகத்தை உள்ளடக்கியிருப்பின், அத்தகைய பாகம் 2006 ஆம் ஆண்டின் மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைந்த அவ் வரி மதிப்பீட்டாண்டினை உடன் அடுத்துறும் வரி மதிப்பீட்டின் நான்கு ஆண்டுகளினுள் வருகின்ற வரி மதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் பங்கிடப்படலாம்,

என்பதுடன் அவ்வாறு பங்கிடப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவின் பாகங்கள் அத்தகைய வரி மதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காண்மையினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து அவ்வாறு கழிக்கப்பட முடியுமான அவ்வளவிற்குக் கழிக்கப்படுதல் வேண்டும்."

4. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) பின்வரும் விடயங்களை அட்டவணையின் 4 ஆம், 5 ஆம் விடயங்களிற்கு இடுவதன் மூலமும்:-

4. ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் என்பவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எழுகின்ற இயைபான மொத்த விற்பனை வரவின் பின்வருவனவற்றினது அத்தகைய பாகம் -

(i) அவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும் உண்ணாட்டரசிறைச் சட்டத் திற்கான ஐந்தாம் அட்டவணையிலுள்ள 28ஆம் விடயத்தைத் தவிர அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலவை;

0.5 சதவீதம்

(ii) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின்கீழ் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டுள்ள ஏதேனும் தொழில் முயற்சியால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் என்பவற்றிலிருந்தான இலாபங்களும்

வருமானமும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டர சிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவொரு வீதத்திற்கு சமமான வீதத்தில் எக்காலப் பகுதிக்காக வரி செலுத்தற்பாலனவாகவுள்ளனவோ அக்காலப்பகுதியின் போதான இயைபான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள அத்தகைய தொழில் முயற்சி.

0.5 சதவீதம்

4அ. ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் என்பவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதி அன்று அல்லது அதன் பின்னர் எழுகின்ற இயைபான மொத்த விற்பனை வரவின் பின்வருவனவற்றினது அத்தகைய பாகம் -

(i) அவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும் உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிலுள்ள 24 ஆம், 28 ஆம் விடயத்தைத் தவிர அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வீதத்தில் வருமான வரி விதிக்கப்படற்பாலவை;

0.5 சதவீதம்

(ii) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ள ஏதேனும் தொழில்முயற்சியினால் கொண்டு நடாத்தப்படும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் என்பவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவொரு வீதத்திற்கு சமமானவொரு வீதத்தில் எக்காலப்பகுதிக்காக வரி செலுத்தற்பாலனவாகவுள்ளனவோ அக்காலப்பகுதியின் போதான இயைபான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள அத்தகைய தொழில்முயற்சி.

0.5 சதவீதம்

5. விற்பனையாளரினால் உற்பத்தி செய்யப்படாத மோட்டார் வாகனங்களின் அல்லது மதுபானத்தின் மொத்த விற்பனையை (விநியோகிப்பாளர் தவிர) அல்லது சில்லறை விற்பனையைக் கையாளுகின்ற ஏதேனும் வியாபாரத்திலிருந்தான அல்லது தொழிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள இயைபான மொத்த விற்பனை வரவின் பின்வருவனவற்றிலிருந்து அத்தகைய பாகம்:-

(i) 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னராக எழுகின்றவைக்கு

0.5 சதவீதம்

(ii) 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்றும் அதன் பின்னரும் எழுகின்றவைக்கு

1.0 சதவீதம்

2. பின்வரும் விடயங்களை அட்டவணையின் 11ஆம் விடயத்திற்கு பதிலிடுவதன் மூலமும்:-

"11. பின்வருவனவற்றைக் கொண்டுள்ளவாறான 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னராக எழுகின்ற இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் -

(i) ஆடைகளை ஏற்றுமதி செய்வதிலிருந்தான அல்லது ஆடை ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக ஆடைகளை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய ஆட்களுக்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புடவைகளை வழங்குவதிலிருந்தான மொத்த விற்பனை வரவு.

0.1 சதவீதம்

(ii) முதலீட்டுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரமனையொன்று ஆடைகளை ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள அளவுக்கு அத்தகைய வியாபாரமனையின் மொத்த விற்பனை வரவு.

0.1 சதவீதம்"

11அ. பின்வருவனவற்றைக் கொண்டுள்ளவாறான 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழுகின்ற இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் -

(i)(அ) ஆடைகளின் ஏற்றுமதியில்; அல்லது

(ஆ) ஏற்றுமதி செய்வதற்கென ஆடைகளின் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஆடைகளை வழங்குவதில்;

(இ) ஏற்றுமதியாளரினால் ஏற்றுமதி செய்வதற்காக ஆடைகளை உற்பத்தி செய்வதில் பயன்படுத்துவதற்கென ஆடைகளின் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புடவைகளை வழங்குவதில்.

இருந்தான மொத்த விற்பனை வரவு.

(ii) முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரமனையொன்று ஆடைகளை ஏற்றுமதி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள அளவுக்கு அத்தகைய வியாபாரமனையின் மொத்த விற்பனை வரவு.

0.1 சதவீதம்

5. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2008 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. (1) இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் 2008 ஆம் ஆண்டு சனவரி 1ஆம் தேதியன்று எல்லா நோக்கங்களுக்கும் வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

2. 2007 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப் பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீட்டை விதிப்பனவு செய்தல்.

2. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் உற்பத்தித் தீர்வையை செலுத்தும் பொறுப்புடையதும் இதற்கான அட்டவணையின் Iஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் இசைவாக்கப்பட்ட குறியீடு இலக்க முறைமையின் கீழ் வருகின்றதும், அத்துடன் அவ்வட்டணையில் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்படும் சிலிண்டர் கொள்ளளவு, ஆசன கொள்ளளவு அல்லது எடை யொன்றை கொண்டுள்ளதுமான ஏதேனும் மோட்டார் வாகனம் மீது (இதனகத்துப் பின்னர் “அறவீடு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு என அழைக்கப்படுவதும், இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை உ இன் நியதிகளின்படி தீர்மானிக்கப்பட்ட அத்தகைய மோட்டார் வாகனங்களின் சுங்கப் பெறுமதியும் அவற்றின்மீது அறவிடப்படும் எல்லா வரிகளும், தீர்வைகளும் அறவீடுகளும் அடங்கிய கூட்டு மொத்தப் பெறுமதியின் மீதான அவ்வட்டணையின் III ஆம் நிரையில் குறித்துரைக்கப்படும் வீதத்தில் கணக்கிடப்பட்ட தொகையொன்றாகவுள்ளதுமான அறவீடொன்று இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் இறுக்கப்படுதலும் அறவிடப்படுதலும் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக “மோட்டார் வாகனம்” என்னும் சொல்லமைப்பு உந்து விசை மோட்டார் முச்சக்கரவண்டியை உள்ளடக்காது.”

3. முதன்மைச் சட்டவாக்கம், அதன் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் அட்டவணையைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

| இல. | நிரை I எச்.எஸ். குறிப்பீடு இல. | நிரை II சிலிண்டர் கொள்வனவு/ ஆசன கொள்ளளவு/ எடை | நிரை III வீதம் |
|---|---|---|---|
| 01 | 8703 | 1600 ஐ விஞ்சாத சிலிண்டர் கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 5.0 சதவீதம் |
| 02 | 8703 | 1600 ஐ விஞ்சியதும் 2000 ஐ விஞ்சாததுமதன சிலிண்டர் கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 7.5 சதவீதம் |
| 03 | 8703 | 2000 ஐ விஞ்சாத சிலிண்டர் கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 10 சதவீதம் |
| 04 | 8702 | 13 ஆட்களுக்குக் குறைவான ஆசன கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 10 சதவீதம் |
| 05 | 8702 | 13 ஆட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட ஆனால் 17 ஆட்களுக்குக் குறைவான ஆசன கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 5.0 சதவீதம் |
| 06 | 8702 | 17 ஆட்களுக்குக் குறைவான ஆசன கொள்ளளவைக் கொண்டுள்ள மோட்டார் வாகனம் | 7.5 சதவீதம் |
| 07 | 8704 | மோட்டார் வாகனம் (குறித்துரைக்கப்பட்ட எடையை உடைய) | 5.0 சதவீதம் |

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்பு வாசகத்தில், அதன் (ஆ) என்னும் பந்தியையும் "பின்போடலாம்." என்னும் சொல்லையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுதவன் மூலம் இத்தாறிருத்தப்படுகின்றது :-

"(ஆ) (i) ஏதேனும் கருத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய உயர்பெறுமதி கொண்ட பொறித் தொகுதியாக, எந்திரத் தொகுதியாக அல்லது சாதனமாக உள்ளவையும்; அல்லது

(ii) பொருட்காட்சிப் பொருட்களாக அல்லது ஏதேனும் தொழிநுட்ப விளக்கத்தின் பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டிய பண்டங்களாக உள்ளவையும்,

இலங்கைக்குள் தற்காலிகமாக இறக்குமதி செய்யப்பட்டவையும், விடயத்துக்கேற்ப, அத்தகைய கருத்திட்டம், பொருட்காட்சி அல்லது விளக்கம் முடிந்த பின்னர் அமைச்சரின் அங்கீகாரத்துடன் மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றவையுமான எவையேனும் பண்டங்கள் மீது, அத்தகைய கருத்திட்டம், பொருட்காட்சி அல்லது விளக்கத் தேதிவரை,

வருமதியான வரிக்கொடுப்பனவைப் பின்போடலாம்."

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) ஆறாம் உட்பிரிவின் (iv) ஆம் உட்பந்தியையும் அவ்வுட் பிரிவின் முடிவுவரையுள்ள எல்லாச் சொற்களையும் எண்களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(iv)விடயத்துக்கேற்ப, (iii) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பணப்பட்டியலின் அல்லது சுங்க வெளிப்படுத்துகையின் மீதான உள்ளீட்டு வரி, அத்தகைய வரிப் பணப்பட்டியல் தேதியிலிருந்து

அல்லது சுங்க வெளிப்படுத்துகைத் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்கள் முடிவுறுவதன் மேல் அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான வெளியீட்டு வரியிலிருந்து, சொல்லப்பட்ட பன்னிரெண்டு மாத காலப்பகுதியினுள் அவ் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான விபரத்திரட்டைக் கொடுத்துதவுவதன் மூலம் இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கழிக்கப்படவில்லையாயின்:

ஆயின், எவ்வாறாயினும், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளும், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் உட்பந்தியின் (i) ஆம் விடயத்திலும் (ii) ஆம் விடயத்திலும் குறித்துரைக்கப்பட்ட விலக்களிப்புகளும் எவ்வாறிருப்பினும், மேற்கூறப்பட்ட விடயங்களில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான ஏதேனும் செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அல்லது வேறேதேனும் விசேட கருத்திட்டத்துக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஆளுக்கு, கொடுப்பனவானது அரசாங்கத்தினால் பொறுக்கப்படுமிடத்து, அத்தகைய கருத்திட்டங்களுக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட பண்டங்களின் அல்லது சேவைகளின் கொள்வனவு மீது உள்ளீட்டு வரி அனுமதிக்கப்படலாம்.".

(2) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில், அவ்வுட் பிரிவுக்கான காப்பு வாசகத்தின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"ஆயின், மேலும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தின் (ஊ) என்னும் உட்பந்தியின் (i) ஆம் விடயத்திலும் (ii) ஆம் விடயத்திலும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கு அல்லது வேறேதேனும் விசேட கருத்திட்டத்துக்குப் பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்ற எவரேனுமாளின்; அத்துடன் இவ்வுட் பிரிவின் நியதிகளின்படி அனுமதிக்கப்படற்பாலதான உள்ளீட்டு வரியை நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய கருத்திட்டத்தின் இயைபான காலப்பகுதிக்காக வழங்குநர்களின் வழங்கலின் பெறுமதி, வெளியீட்டு வரி எந்த வரி விதிக்கப்படற்பாலதான வழங்கலின் மீது கணிப்பீடு செய்யப்படுகின்றதோ அந்த வரி விதிக்கப்படற்பாலதான வழங்கலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.".

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அதன் (ii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற் திருத்தப்படுகின்றது:-

"(ii) 2003, யூலை 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2007, திசெம்பர் 31 ஆம் தேதிக்கு முன்னர் எவரேனும் ஆளினால்; அத்துடன்

(iii) 2008, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர், 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் தவிர்ந்த வேறு எவரேனும் ஆளினால்,".

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட எவரேனுமாளின் குத்தகைக் கையிருப்புகளின் பாகமாகவமைகின்றவொரு சொத்தாகவுள்ள" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குத்தகைக்குக் கொடுக்கப்படுகின்றவொரு சொத்தாகவுள்ள" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, இவ்வத்தியாயத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரியைக் கழிக்கு முன்னர் தேறிய இலாபத்தின் அல்லது நட்டத்தின் அடிப்படையில், அத்தகைய நிறுவனத்தின் பெறுமதிச்சேர்ப்பு கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஏ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்திருத்தப்படுகின்றது:-

"(4) இவ்வத்தியாயத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒவ்வோராளும் அல்லது ஒவ்வொரு பங்காண்மையும், இயைபான காலாண்டு முடிவுறுவதனை உடனடுத்துப் பின்வரும் மாதத்தின் இருபதாம் நாளுக்குப் பிந்தாமல், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலானதும் அத்தகைய விபரங்களைக் கொண்டதுமான விபரத்திரட்டொன்றை உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.".

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அத்தகைய கொடுப்பனவிலிருந்து அத்தகைய கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்ட வரியின் மூன்றிலொரு பங்கைக் கழித்தல் வேண்டுமென்பதுடன்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய

கொடுப்பனவிலிருந்து அத்தகைய கொடுப்பனவில் உள்ளடக்கப்பட்ட வரியின் மூன்றிலொரு பங்கைச் "சேர்பெறுமதி வரி முற்பணக் கொடுப்பனவாக"க் கழித்தல் வேண்டுமென்பதுடன்," என்னும் சொற்களை இடுதவன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"சேர்பெறுமதி வரி முற்பணக் கொடுப்பனவுகளைக் கழித்தல்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"தவணை தவறிய வரியை அறவிடு வதற்கான கால எல்லை.

48அ. ஆணையாளர் தலைமையதிபதி, இறுக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட தவணை தவறிய வரி 37 ஆம் பிரிவின்கீழ் எந்த வரி மதிப்பீட்டின் மூலம் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் முடிவில் இறுதியானதாகவும் முடிவானதாகவும் வருகின்றதோ அந்த வரி மதிப்பீட்டிலிருந்து மூன்று மாதங்கள் பூர்த்தி செய்யப்பட்டதிலிருந்து ஐந்தாண்டு காலப்பகுதியொன்று கழிந்துள்ளவிடத்து, அத்தகைய வரியை அறவிடுவதற்காக, இச்சட்டத்தின் 42, 43, 44 அல்லது 48 என்னும் பிரிவுகளின் கீழ் ஏதேனும் வழக்கு நடவடிக்கையைத் தொடங்குதலாகாது.".

9. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் II ஆம் பாகத்தில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

"(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில் -

(அ) (iv) ஆம் விடயத்தில், "தங்க நாணயங்கள் மற்றும் பொறித் தொகுதி அல்லது உபகரணம் எதனினதும் தற்காலிக இறக்குமதி அல்லது பொருட்காட்சிப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டிய அல்லது ஏதேனும் தொழிநுட்ப விளக்கப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டியவையும் இறக்குமதித் தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களினுள் மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றவையுமான எவையேனும் பண்டங்கள்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "தங்க நாணயங்கள் (2007.07.17 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) (xii) ஆம் விடயத்தில், "கைத்தறித் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் நூலிழையும் சாயங்களும் மற்றும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின் கீழ் அடையாளங் காணப்பட்டவாறு, அத்துடன் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) புடவைத் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் நூலிழையும் கைத்தறித் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் சாயங்களும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில் -

(அ) அதன் (i)(அ) என்னும் விடயத்தில், "பாடசாலையொன்றினால் அல்லது (2004 யூலை 1ஆம் தேதியிலிருந்து பயனுறும்)" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "பாடசாலையொன்றினால் அல்லது (2006.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) (xii)ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(xii) மருத்துவ நிறுவனங்களினால் அல்லது அத்தகைய கவனிப்பை வழங்குகின்ற உயர்தொழில் ரீதியில் தகைமை பெற்ற ஆட்களினால் வழங்கப்பட்ட எல்லாச் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளும் (2007.07.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);;

(இ) (xxi) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(xxii) களிமண் கூரை ஓடுகள் அல்லது இரசாயன நப்தா இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அளவுக்கு, அத்தகைய களிமண் கூரை ஓடுகள் (2007.07.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) அல்லது இரசாயன நப்தா (2007.07.17);

(xxiii) சேர்பெறுமதி வரி, 2007.07.01 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் சோகரிக்கப்படாதுள்ளவிடத்து அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களத்துக்குச் செலுத்தப்படாதுள்ளவிடத்து, பதனிடப்படாத கமத்தொழில், தோட்ட வேளாண்மை அல்லது மீன்பிடி உற்பத்திப் பொருட்களின் உள்ளூர் வழங்கலுட்பட, இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பதனிடப்படாத கமத்தொழில் தோட்ட வேளாண்மை அல்லது மீன்பிடி உற்பத்திப் பொருட்கள்;

(xxiv) 2004, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்) சேர்பெறு மதி வரி சேகரிக்கப்பட்டு உண்ணாட்டர சிறைத் திணைக்களத்துக்குச் செலுத்தப்படாதுள்ளவிடத்து, பதனிடப்படாத இறால்களின் உள்ஷர் வழங்கலுட்பட, இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பதனிடப்படாத இறால்கள்;

(xxv) இறக்குமதி செய்யப்பட்ட பிரம்புகள் (2007.07.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);

(xxvi) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பசும்பால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அளவு வரை அத்தகைய பாலிலிருந்து உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பாலுற்பத்திப் பொருட்களும், இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசையைக் கொண்டுள்ள உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி உற்பத்திப் பொருட்களும் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்); அத்துடன்

(xxvii) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சீனி (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).";

(3) அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில், (xviii) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(xix) (அ) ஏதேனும் கருத்திட்டத்துக்காகப் பயன்படுத்தப்படவேண்டிய உயர் பெறுமதி கொண்ட பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது சாதனம்; அல்லது

(ஆ) பொருட்காட்சிப் பொருட்ஹளாக அல்லது ஏதேனும் தொழினுட்ப விளக்கப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட வேண்டிய பண்டங்கள்,

அத்துடன் இவை, விடயத்துக்கேற்ப, அத்தகைய கருத்திட்டம், பொருட்காட்சி அல்லது விளக்கம் முடிந்த பின்னர் மீள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவென்பதுடன், இவை தொடர்பில் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாவது காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி வரி பின்போடவும் படுகின்றது (2007.07.17 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);

(xx) சுங்க நோக்கங்களுக்காகக் குறித்துரைக்கப்படும் இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரணம் மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின்கீழ் அடையாளங் காணப்பட்ட வானூர்தி என்ஜின்கள் அல்லது வானூர்தி உதிரிப்பாகங்கள் (2007.07.17 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);

(xxi) எச்எஸ் கோவை இல. 1401.20 இன் கீழான பிரம்புகள் (2007.07.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);

(xxii) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 24இ என்னும் பிரிவின்கீழ் வரி விடுமுறை யொன்றுக்குத் தகைமையுள்ள பொறுப்பு முயற்சியொன்றினால் உற்பத்தி செய்யும் நோக்கத்துக்காக அல்லது சேவைகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய பொறுப்பு முயற்சியினாலான பொறித்தொகுதியும் எந்திரத்தொகுதியும் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);

(xxiii) நிதியமைச்சரின் அங்கீகாரத்துடன் (ஊ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டத்துக்கான அல்லது குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கான பண்டங்கள்.";

(4) அப்பாகத்தின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(ஊ) பின்வருவனவற்றை வழங்குதல் :-

(i) 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் நியதிகளின்படி, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் ஒன்றாக அடையாளங்காணப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்துக்கான பண்டங்கள் அல்லது சேவைகள்(2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்); அல்லது

(ii) இக்கருத்திட்டத்தின் மீதான வரி அரசாங்கத்தினால் பொறுக்கப்படுகின்றதும், நாட்டுக்கான பொருளாதார நன்மையைக் கவனத்துட்கொண்டு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் அடையாங்காணப்பட்டதுமான ஏதேனும் கருத்திட்டத்துக்கான பண்டங்கள் அல்லது சேவைகள் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்); அல்லது

(iii) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தினாலான பண்டங்கள் அல்லது சேவைகள் (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).".

10. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது :-

"மூன்றாம் அட்டவணை

அடிப்படை வீதம்

(அ) பின்வருவனவற்றை வழங்குதல் அல்லது இறக்குமதி செய்தல் :-

(i) 2007 திசெம்பர் 31 வரைக்கும் சீனி;

(ii) பருப்பு;

(iii) 2007 யூன் 30 வரைக்கும் உருளைக்கிழங்கு;

(iv) 2007 யூன் 30 வரைக்கும் வெங்காயம்;

(v) மீன் கருவாடு;

(vi) மிளகாய்;

(vii) சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அடையாளங் காணப்பட்ட உயர் தொழிநுட்ப மருத்துவச் சாதனங்கள் அல்லது சீட்டு வழங்கும் எந்திரத் தொகுதியை உற்பத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் எந்திரத் தொகுதி;

(viii) நகைகள்;

[இவ்வட்டவணையின் (i) ஆம், (ii) ஆம் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களின் இறக்குமதி அல்லது வழங்குகை, எல்லா நோக்கங்களுக்காகவும் 2004, ஒற்றோபர் 1 ஆம் தேதியிலிருந்து 2004, நவெம்பர் 18 ஆம் தேதிவரை சேர்பெறுமதி வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.]

(ஆ) பின்வருவனவற்றை இறக்குமதி செய்தல் :-

(i) தேசிய திரைப்படக்கூட்டுத்தாபன தவிசாளரின் அங்கீகாரத்துடன் சுங்க நோக்கங்களுக்காக இசைவாக்கப்பட்ட உணவுப் பொருள் விவரண மற்றும் கோவையிடும் முறைமை இலக்கங்களின்கீழ் உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியினால் அடையாளங் காணப்படும், வெளிக்காட்டப்பட்ட அல்லது உருவிளக்கப்படுத்தப்பட்ட சினே திரைப்படங்களும், காந்த சினே ஒலிப்பதிவுக் கருவிகளும், திரைப்படம்சார் படம்பிடிக்கும் கருவிகளும், படங்காட்டு கருவிகளும், பாகங்களும் துணைப் பொருட்களும், திரைப்படம்சார் ஆய்வுகூடங்களுக்கான உபகரணங்களும் சாதனங்களும், மின்சார மின்னிழைகளும் அல்லது மின்வெளியேற்று விளக்குகளும் வில் விளக்குக் கார்பனும்;

(ii) சீனி (2008.01.01 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);

(iii) தகரத்திலடைக்கப்பட்ட மீன், சணகம், பாசிப் பயறு (2007.06.05 ஆம் தேதியிலிருந்து பயனுறும்);

(iv) உருளைக்கிழங்கு (2007 யூலை 1 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).".

(v) வெங்காயம் (2007 யூலை 1 ஆம் தேதியிலிருந்து பயனுறும்).".

11.(1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்ட வாக்கத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2007 யூலை 17 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(2) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவுக்கும் (10)ஆம் உட்பிரிவுக்கும் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2008 சனவரி 1ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(3) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஏ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் (புதிய (4) ஆம் உட்பிரிவைச் சேர்த்தல்), எல்லா நோக்கங்களுக்காகவும் 2007, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(4) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும் 2008, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(5) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 48அ என்னும் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் (பிரிவை மாற்றீடு செய்தல்), எல்லா நோக்கங்களுக்காகவும் 2006, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

12. இரண்டாயிரத்து ஏழாமாண்டு யூலை 1 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கும் எவரேனுமாள், உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பு செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும், செய்யப்படுகின்றதாகவும் கருதப்படுதலும் வேண்டும்;

13. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

# 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பிரதேசிய சங்வர்த்தனை வங்கி சட்டம்

[2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

## 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள், ஒப்பந்தங்கள், ஊழியர்களை உள்ளீர்த்ததாக பிரதேசிய சங்வர்த்தனை வங்கியைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பிரதேசிய சங்வர்த்தனை வங்கி என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) (இதனகத்துப்பின்னா் “வங்கி” எனக் குறிப்பீடு செய்யப்படும்) பிரதேசிய சங்வர்த்தனை வங்கியென அழைக்கப்பட வேண்டிய வங்கியொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) வங்கியானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயர்கொண்டு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டுமென்பதுடன் இடையறாவழியுரிமை யையும் பொது இலச்சினையொன்றையும் கொண்டிருத்தலும் வேண்டும். அத்துடன் அது அத்தகைய பெயரில் வழக்குத் தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத்தொடரவும் படலாம்.

3. (1) வங்கியின் இலச்சினையானது, தவிசாளரின் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலரின் கட்டுக்காவலில் இருத்தல் வேண்டும்.

(2) வங்கியின் இலச்சினையானது, சபையினால் அங்கீகரிக் கப்படுதல் வேண்டுமென்பதுடன் சபையால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றவும் படலாம்.

(3) வங்கியின் இலச்சினையானது சபையின் இரு பணிப்பாளர்களின் அல்லது சபையின் ஒரு பணிப்பாளரினதும் பிரதான நிறைவேற்று அலுவலரினதும் (அவர் வங்கியின் பொது முகாமையாளராகப் பெயர்குறிக்கப்படுதல் வேண்டும்) சமுகத்தில் தவிர ஏதேனும் சாதனத்தில் பொறிக்கப்படுதலாகாது. இவ்விருவரும் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

4. வங்கியின் தலைமை அலுவலகம் இலங்கையில் கொழும்பில் தாபிக்கப்படுதல் வேண்டும்.

5. வங்கியானது, 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின்படி தற்போது தாபிக்கப்பட்டுள்ளதும் இச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க வங்கிக்கு உரித்தாக்கப்பட்டுள்ளதுமான பிராந்திய அபிவிருத்தி வங்கிகளின் அலுவலகங்கள் அமைந்துள்ள ஏதேனும் இடம் உட்பட, வங்கியின் சபைப் பணிப்பாளர்கள் அவ்வாறு செய்தல் அவசியமெனக் கருதுகின்ற அத்தகைய இடங்களில், இலங்கையில் கிளைகளைத் தாபித்துப் பேணி வரலாம்.

## பாகம் I

### வங்கியின் தத்துவங்களும் குறிக்கோள்களும்

6. வங்கியின் குறிக்கோள்களாவன அபிவிருத்தி, கமத்தொழில், கைத்தொழில், வியாபாரம், வர்த்தகம், விலங்கினங்கள், பெண் வலுவூட்டல், கடற்றொழில் செயற்பாடுகளை மேம்படுத்துவதன் மூலம் முக்கியமாக நுண் நிதிதாபனங்களுக்கும் சிறு, இடைத்தர பொதுமுயற்சிகளுக்கும் நிதி உதவி அனுமதிப்பதன் மூலம் இலங்கையில் அனைத்தடங்கிய பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு வசதி செய்வதாதல் வேண்டும்.

7. அமைச்சரானவர், அரசாங்கத்தின் அபிவிருத்திச் செயற்பாடு தொடர்பான அதன் முன்னுரிமைகளைக் கருத்தில் கொண்டு, ஏதேனும் முன்னுரிமைத்துறைக்கு ஒதுக்கப்படத் தேவைப்படுத்தப்படும் அத்தகைய வீதக் கடனளிப்பை வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் குறித்துரைக்கலாம்.

8. வங்கியானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அத்துடன் ஏதேனும் சட்டத்தால் அல்லது அதன் கீழ் அளிக்கப்பட்ட எவையேனும் தத்துவங்களுக்குப் பங்கமின்றி, 1988 ஆம் ஆண்டின 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் நியதிகளின்படி ஒரு உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியால் கொண்டு நடாத்தப்பட அனுமதிக்கப்பட்ட எல்லா அல்லது ஏதேனும் செயற்பாட்டில் ஈடுபடலாம்.

## பாகம் II

### வங்கியின் முகாமை

9. (1) வங்கியின் அலுவல்களினதும் தொழிலினதும் முகாமைத்துவமும் நிருவாகமும் பணிப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்)

(2) சபையானது இச்சட்டத்தின்கீழ் அல்லது வங்கிக் குறிக்கோள்களுடன் தொடர்புடைய வேறேதேனும் சட்டத்தின்கீழ் வங்கியின் எல்லா அல்லது ஏதேனும் தத்துவங்களையும் பிரயோகிக்கலாம், அத்துடன் விடயத்திற்கேற்ப இச்சட்டத்தின்கீழ் அல்லது அத்தகைய வேறு சட்டத்தின்கீழ் எந்தச் செயல்களையும் விடயங்களையும் புரிவதற்கு அது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அச்செயல்கள் விடயங்கள் அனைத்தையும் புரியலாம்.

(3) சபையானது அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் உறுதியான தொழிற்கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்படுதல் வேண்டுமென்பதுடன் அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உரிய கவனஞ் செலுத்துதலும் வேண்டும்.

10. சபையானது, இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவில் தரப்பட்ட முறையில், விடயத்துக்கேற்ப, பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழுக்குக் குறையாததும் பதினொன்றுக்கு மேற்படாததுமான பணிப்பாளர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. (1) பின்வருவோர் பணிப்பாளர் சபையின் பதவிவழி உறுப்பினர்களாதல் வேண்டும் :-

(அ) திறைசேரிச் செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட திறைசேரிப் பிரதிச் செயலாளரொருவர்;

(ஆ) இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இலங்கை வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளரொருவர்;

(இ) மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மக்கள் வங்கியின் பிரதிப் பொதுமுகாமையாளரொருவர்;

(ஈ) தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் ஒரு பிரதிப் பொதுமுகாமையாளர்.

(2) வங்கித்தொழில், கணக்கியல், நிதி, சட்டம், முகாமைத்துவம், ஆள்வள முகாமைத்துவம், கூட்டுறவுச் செயற்பாடுகள், காட்டுப்புற அபிவிருத்தி அல்லது பெண் வலுவூட்டல்துறையில் கல்வி அல்லது உயர்தொழில் தகைமையை அல்லது அனுபவத் தைக்கொண்டுள்ள ஆட்களிடையேயிருந்து திறைசேரிச் செயலாளரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் நியமிக்கப்படவேண்டிய (இதனகத்துப்பின்னர் "பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூன்றுக்குக் குறையாததும் ஏழுக்குக் கூடாததுமான பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்கள் இருத்தல் வேண்டும். அமைச்சர் அத்தகைய பெயர் குறித்த நியமனங்களை செய்கின்றபோது இயலுமானளவு சபையின் பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த முயலுதல் வேண்டும்.

(3) ஒரு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் மூன்று ஆண்டுகள் கொண்டவொரு காலப்பகுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(4) ஒரு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர், இப் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலொழிய மூன்று ஆண்டுகள் கொண்ட இரண்டாவது காலப்பகுதியொன்றுக்கு மீள நியமிக்கப்படலாம்.

(5) அமைச்சரானவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளரொருவரை அதற்காகக் குறித்தளிக்கப்பட வேண்டிய காரணத்துக்காகப் பதவியிலிருந்து நீக்கலாம்.

(6) ஒரு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்டு அதற்காக எழுதப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம் அவரது பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

(7) ஒரு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சுகயீனம், அல்லது வேறு பலவீனம் அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிய தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, அவரது இடத்தில் செயலாற்றவென அமைச்சரானவர் இன்னுமோர் ஆளைப் பெயர் குறித்து நியமிக்கலாம்.

(8) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர் ஒருவர், இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாகப் பதவியை வறிதாக்குகின்றவிடத்து, அமைச்சர், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, பதவியை வறிதாக்கிய அத்தகைய ஆள் பிரதிநிதித்துவப்படுத்திய நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த வேறோராளைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும். அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள், எந்தப் பெயர் நியமிக்கப்பட்ட பணிப்பாளரை அடுத்துறுகின்றாரோ அவரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

12. (1) அமைச்சரானவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களுள் ஒருவரை சபையின் தவிசாளராகவிருக்கவென நியமிக்கலாம்.

(2) தவிசாளர் சுகயீனம், இயலாமை அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருந்தால் அவரது இடத்தில் பதில் கடமையாற்றுவதற்கு இன்னொரு பணிப்பாளரைச் சபை தேந்தெடுத்தல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், சபையின் தவிசாளரை, குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக பதவியிலிருந்து அகற்றலாம்.

(4) தவிசாளர் அமைச்சருக்கு முகவரியிடப்படும் கடிதம் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

(5) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக தவிசாளரின் பதவிக்காலம் சபையில் அவரது உறுப்பாண் மைக் காலமாதல் வேண்டும்.

13. சபை உறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன் தவிசாளரானவர் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களிடையேயிருந்து சபையின் இரண்டு உறுப்பினர்களை வங்கியினால் ஆதரவளிக்கப்படவுள்ள தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் குறிப்பான துறைகள் தொடர்பாக விசேடத்துவ அறிவு தேவைப்படுகின்றவிடத்து, தவிசாளருக்கு அறிவுரை வழங்குவதற்கென, நிருவாகப் பணிப்பாளர்களாகப் பெயர்குறித்தல் வேண்டும்.

14. இயைபான அரசாங்கச் சுற்றுநிருபங்களுக்கு ஒத்திசைவாக சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறாக வங்கியின் நிதியங்களிலிருந்து அத்தகைய வேதனம் பணிப்பாளர்களுக்குச் செலுத்தப்படலாம்.

15. வங்கியினால் செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக் கும் ஒப்பந்தமொன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அக்கறை கொண்டுள்ள பணிப்பாளர் ஒருவர் தமது அக்கறையின் தன்மை பற்றிச் சபையின் கூட்டமொன்றில் வெளிப்படுத்துதல் வேண்டும். இவ்வெளிப்படுத்துதல் அத்தகைய சபையின் குறிப்புகளில் பதிவு செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அப்பணிப்பாளர் அத்தகைய ஒப்பந்தம் தொடர்பில் அதன் பின்னர் அத்தகைய சபையின் வாதப் பிரதிவாதத்தில் அல்லது முடிபில் பங்குபற்றுதலும் ஆகாது.

16.(1) சபையின் தவிசாளர், சமுகமாயிருந்தால் சபையின் ஒவ்வொரு கூட்டத்துக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். அத்தகைய ஏதேனும் கூட்டத்துக்கு தவிசாளர் வருகை தராமல் இருக்கின்றவிடத்து, சமுகமாயிருக்கும் பணிப்பாளர்கள், அத்தகைய கூட்டத்துக்கு தலைமை தாங்குவதற்குச் சமுகமாயிருக்கும் பணிப்பாளர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண்ணானது -

(அ) பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை ஏழாக இருக்குமிடத்து ஐந்தாதலும்;

(ஆ) பணிப்பாளர்களின் மொத்த எண்ணிக்கை ஏழுக்கு மேற்படுமாயின் ஆறாக இருத்தலும் வேண்டும் என்பதுடன்,

அது பதவிவழி மற்றும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட பணிப்பாளர்களை உள்ளடக்குதலும் வேண்டும்.

(3) சபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைமை தாங்குகின்ற ஆளுக்கு தமது சொந்த வாக்கோடு சேர்த்து அறுதியிடும் வாக்கொன்றும் இருத்தல் வேண்டும்.

(4) இரண்டாம், (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு அமைய, சபையானது, சபையின் கூட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கை முறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் கையொப்பமிடப்பட வேண்டிய விதம் பற்றிய நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்தலாம்.

17. சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், பணிப்பாளர்களுக்கிடையில் ஏதேனும் வெற்றிடம் அல்லது பணிப்பாளர் ஒருவரின் நியமனத்தில் அல்லது தேர்ந்தெடுப்பில் ஏதேனும் குறைபாடு இருத்தல் காரணமாக மட்டும் வலிதற்ற தாதலாகாது.

18. (1) சபையானது, அதன் தத்துவங்கள் கடமைகளுள் எதனையும் வங்கியின் எவரேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்குக் காலத்துக்குக் காலம் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தத்துவம் அல்லது கடமை எதுவும் எவ்வாளுக்குக் கையளிக்கப்படுகின்றதோ, அவ்வாள் ஒவ்வொருவரும் கையளிக்கப்பட்ட அத்தகைய தத்துவத்தையும் கடமையையும் சபையினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைவாக பிரயோகித்தலும் புரிதலும் வேண்டும் என்பதுடன் சபையானது அவ்வாறு கையளிக்கப்பட்ட தத்துவங்களையும் கடமைகளையும் எந்நேரத்திலும் ஒழிக்கலாம் அல்லது மீட்டுப்பெறலாம்.

19. சபையானது வங்கியின் ஒரு முழுநேர அலுவலரை வங்கிச் செயலாளராக நியமித்தல் வேண்டும்.

## பாகம் III

## நிதி

20. (1) வங்கியின் மூலதனமானது, 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி வங்கிகளுக்கு அரசாங்கத்தாலும், இலங்கை வங்கியாலும் மக்கள் வங்கியாலும், தேசிய சேமிப்பு வங்கியாலும் அளிக்கப்பட்டதும் இச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின் நியதிகளின்படி வங்கிக்கு உரித்தாக்கப்பட்டதும் ஆன உதவுதொகைகளை அடக்கிய அத்தகைய தொகையினைக் கொண்டதாதல் வேண்டும்.

(2) அரசாங்கமும், இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் மற்றும் தேசிய சேமிப்பு வங்கியும் அத்தகைய உதவுதொகை அளிப்புக் காரணமாக வங்கியின் பங்குதாரராக வருதல் வேண்டுமென்பதுடன், அவ்வவ்வுதவுதொகையின் விகிதத்தில் வங்கியில் பங்குகள் குறித்தொதுக்கப்படுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பங்குதாரர்கள், அவ்வங்கியின் ஆரம்ப மூலதனத்துக்கு அத்தகைய பங்குதாரர்களால் உதவுதொகையாகச் செலுத்தப்படவேண்டுமென இதனகத்துக் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக அவற்றினது தற்றுணிபில் மேற்கொண்டும் மூலதன உதவு தொகையளிக்கலாம் அல்லது வங்கியில் பங்குகளைக் கொள்வனவு செய்யலாம்.

21. வங்கியின் பங்குதாரர், சபையினால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறாக, தம்மிடையே மட்டும் பங்குகளைக் கைமாற்றலாம்.

22. 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி வங்கியின் பொது ஒதுக்கு நிதியத்தைக் கொண்டுள்ளதும் இச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழ் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டதுமான எல்லாப் பணத்தொகைகளும் வங்கியின் பொது ஒதுக்கு நிதியமாக அமைதல் வேண்டுமென்பதுடன், சபையானது, அத்தகைய பொது ஒதுக்கு நிதியத்துக்கு, அதன் ஆண்டு இலாபத்தில் இருபது சதவீதத்தை வரவு வைக்கவும் செய்யலாம்.

23. (1) 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின் நியதிகளின்படி தாபிக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி வங்கியின் விசேட ஒதுக்கு நிதியத்தைக் கொண்டுள்ளதும் இச்சட்டத்தின் 42 ஆம் பிரிவின்கீழ் வங்கிக்கு உரித்தாக்கப்பட்டதுமான எல்லாப் பணத்தொகைகளும் வங்கியின் விசேட ஒதுக்கு நிதியமாக அமைதல் வேண்டுமென்பதுடன், சபையானது, வங்கியின் வராத் தனிசுகளுக்கும் சந்தேகத்துக்கிடமான தனிசுகளுக்கும் ஏற்பாடு செய்வதற்காக ஆண்டு இலாபத்தின் ஐந்து சதவீதத்தை ஒவ்வோராண்டும் அத்தகைய விசேட ஒதுக்கு நிதியத்துக்கு வரவு வைத்தல் வேண்டும்.

(2) “நலன்புரி கணக்கு” என அழைக்கவும் அறியவும்படவேண்டிய ஒரு புறம்பான கணக்கொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அதனுள், இச்சட்டம் நடைமுறைக்கு வருமுன்னராக ஏதேனும் பிராந்திய அபிவிருத்தி வங்கியின் ஊழியர்களாகவுள்ள ஆட்களுக்கு நலன்புரி வசதிகளை ஏற்பாடு செய்வதற்கென அடையாளஞ் செய்யப்பட்ட எல்லாப் பணங்களும் வரவு வைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய கணக்கில் வரவிலிருக்கும் பணம் விதித்துரைக்கப்படவேண்டிய அத்தகைய விதத்தில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

24. வங்கியானது, பங்குதாரருக்கு பங்கிலாபக் கொடுப்பனவு நோக்கத்துக்காக சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஆண்டிலாபத்தின் அத்தகைய சதவீதத்தைப் பயன்படுத்துதல் வேண்டும்.

25. வங்கியினால் அளிக்கப்படும் ஏதேனும் கடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக பிணைப்பொறுப்பின் மீதும் வேறு நியதிநிபந்தனைகள் மீதுமாதல் வேண்டும்.

## பாகம் IV

## பணியாட்டொகுதி

26. (1) வங்கித்தொழிலில், சிரேட்ட முகாமைத்துவத்தரத்தில் பத்து ஆண்டு அனுபவங்கொண்டவரான -

(அ) இயைபான துறையில் பட்டப்பின் தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் இளமாணிப் பட்டமொன்றைக் கொண்ட; அல்லது

(ஆ) வங்கித்தொழிலில் அல்லது வேறு இயைபான துறையில் உயர்தொழிற் தகைமையைக் கொண்ட;

ஆன ஓர் ஆளை, சபை தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய சேவை நியதிநிபந்தனைகள் மீது, சபையானது நியமித்தல் வேண்டும்.

(2) பொது முகாமையாளர் வங்கியின் பிரதான நிறைவேற்று அலுவலராதல் வேண்டுமென்பதுடன், சபையின் பொதுவான பணிப்புரை, மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டுக்கு அமைவாக வங்கியின் அலுவல்களை நடாத்துதலும், முகாமை செய்தலும் நிருவகித்தலும் வேண்டுமென்பதுடன் வங்கி அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு வங்கிக்கு உதவுதலும் வேண்டும்.

(3) பொதுமுகாமையாளர் வங்கியின் ஒரு முழு நேர அலுவலராதல் வேண்டும்.

(4) பொதுமுகாமையாளரின் பதவிக்காலமானது ஆறு மாத ஆரம்ப தகைமைகாண் காலம் உட்பட, முதல் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(5) பொதுமுகாமையாளரின் பதவிக்காலமானது, அவரது தத்துவங்கள், பணிகள், கடமைகளின் முறையே பிரயோகம் புரிகை மற்றும் நிறைவேற்றம் திருப்திகரமானதாகவிருக்குமிடத்து, சபையினால் நீடிக்கப்படலாம்.

27.(1) சபையானது, வங்கித்தொழிலில் சிரேட்ட முகாமைத்துவத் தரத்தில் குறைந்தபட்சம் எட்டு ஆண்டு அனுபவம் கொண்டோரிலிருந்து நான்கு ஆட்களைப் பிரதிப் பொது முகாமையாளர்களாக விருப்பதற்கு என நியமித்தல் வேண்டும். ஒவ்வொரு பிரதிப் பொதுமுகாமையாளரும்-

(அ) இயைபான ஒரு துறையில் பட்டப்பின் தகைமையுடன் அல்லது பட்டப்பின் டிப்ளோமாவுடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் இளமாணிப் பட்டமொன்றைக் கொண்டவராக; அல்லது

(ஆ) வங்கித்தொழில் உயர்தொழில் தகைமையைக் கொண்டவராக,

இருத்தல் வேண்டும்.

(2) பிரதிப் பொதுமுகாமையாளர்கள் வங்கியின் முழுநேர அலுவலர்கள் ஆதல் வேண்டும்.

(3) பிரதிப் பொதுமுகாமையாளர்கள், சபையின் குறிக்கோள்களை எய்தும் பொருட்டு சபையின் பொதுவான பணிப்புரை, மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடுகளுக்கமைவாக வங்கியின் அலுவல்களை பொது முகாமையாளர் நடாத்துவதற்கு முகாமை செய்வதற்கு மற்றும் நிருவகிப்பதற்கு உதவுதல் வேண்டும்.

(4) ஒரு பிரதிப் பொது முகாமையாளரின் பதவிக் காலமானது, ஆறு மாத ஆரம்ப தகைமைகாண் காலம் உட்பட, முதல் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டும்.

(5) பிரதிப் பொது முகாமையாளரின் பதவிக் காலமானது, அவரது வேலை திருப்திகரமானதாகக் காணப்படின் சபை யினால் நீடிக்கப்படலாம்.

28. (1) பொது முகாமையாளர், இளைப்பாறும் வயது, ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் வங்கி அலுவல்களின் தகுந்த நிருவாகத்துக்கு அவசியமாகக் கூடியவாறான வேறேதேனும் கருமம் தொடர்பில் வழிகாட்டு நெறிகளை வழங்குதல் வேண்டும்.

(2) வங்கியின் ஊழியர்கள் அத்தகைய பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

29. (1) சபையானது, சிரேட்ட முகாமைத்துவத் தரத்தில் வங்கித்தொழிலில் அல்லது நிதியில் ஏழு ஆண்டு அனுபவத்தைக் கொண்டவர்களிலிருந்து -

(அ) சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பட்டமொன்றைக் கொண்டவரும்; அல்லது

(ஆ) வங்கித் தொழிலில் தகைமையைப் பெற்றவரும்,

ஆன அத்தகைய எண்ணிக்கையினரான பிராந்தியப் பொது முகாமையாளர்களை சபை தீர்மானிக்க வேண்டியதான அத்தகைய சேவை நியதி நிபந்தனைகள்மீது ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்துக்கும் பொறுப்பாகவிருக்கவென நியமிக்கலாம்.

(2) சகல பிராந்தியப் பொது முகாமையாளர்களும் வங்கியின் பொது முகாமையாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(3) சகல பிராந்தியப் பொது முகாமையாளர்களும் சேமிப்புகளைத் திரட்டுவதற்கும், அதற்கேற்ப கடன்வழங்குதலை உறுதி செய்வதற்கும் அத்துடன் பிராந்திய நோக்குக்கொண்ட அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

30. (1) வங்கியானது அதன் பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கு அது அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய அலுவலர்களையும் ஊழியர்களையும் நியமிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் ஊழியர்களும் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதமாகவும் அத்தகைய விதத்திலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய சேவை நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தோராதலும் வேண்டும்.

## பாகம் V

### வங்கிக் கணக்குகளின் கணக்காய்வு

31. வங்கியின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

32. சபையானது, வங்கியின் வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன பற்றியும் அதன் எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றியும் முறையான கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

33. வங்கியின் கணக்குகள் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

34. வங்கியின் பங்குதாரர்களது ஒரு விசேட சபைக் கூட்டமானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலிருந்து நான்கு மாதங்களுக்குப் பிந்தாமல், வங்கியின் பின்வரும் ஆவணங்களைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கென நடாத்தப்படுதல் வேண்டும்:-

(i) ஐந்தொகை;

(ii) இலாப நட்டக் கணக்கு;

(iii) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை;

(iv) எந்நிதியாண்டு தொடர்பாக கணக்குகள் தயாரிக்கப்பட்டனவோ அந்நிதியாண்டின்போது வங்கிச் செயற்பாடுகள் பற்றிய கணக்கைக் கொடுக்கின்ற வங்கியின் ஒரு ஆண்டறிக்கை; அத்துடன்

(v) அடுத்துவரும் மூன்று ஆண்டுகளில் வங்கி நிலைவரம் பற்றிய ஒரு மீளாய்வு.

35. வங்கியின் விசேட சபைக் கூட்டமொன்று முடிவுற்றதன் மேல் சபையானது ஆண்டறிக்கையின் பிரதியொன்றை அமைச்சருக்குச் சமர்ப்பிக்கச் செய்தல் வேண்டுமென்பதுடன் அவர் அதனைப் பாராளுமன்றத்தின் முன்னர் இடச்செய்வித்தலும் வேண்டும்.

36. வங்கிக்கும் வங்கி தொடர்பிலும் பின்வரும் எழுத்திலான சட்டங்களின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதலாகாது:-

(அ) (80 ஆம் அத்தியாயமான) பணம் கடன் வழங்குதல் கட்டளைச் சட்டம்;

(ஆ) (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்;

(இ) (90 ஆம் அத்தியாயமான) நகை அடைவு பிடிப்போர் கட்டளைச் சட்டம்.

37. வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும் அல்லது வேறு ஊழியரும் அவரது வேண்டுமென்ற செயலினால் அல்லது தவறுகையால் ஏற்படுத்தப்பட்ட அத்தகையவை தவிர்ந்த அவரது கடமைகளை நிறைவேற்றுவது தொடர்பில் அவரால் உறப்படும் எல்லா நட்டங்களுக்கும் செலவுகளுக்கும் எதிராக நட்டோத்திரவாதம் அளிக்கப்படுதல் வேண்டும்.

38. (1) வங்கியின் பணிப்பாளர், கணக்காய்வாளர், அலுவலர், ஊழியர், முகவர் அல்லது வங்கியின் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும், தமது கடமைகளை ஏற்க முன்னதாக வங்கியினதும் அதன் வாடிக்கையாளர்களினதும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களினதும் தொடர்பிலும், எவரேனும் ஆளுடனான அல்லது நிறுவனத்துடனான கணக்கின் நிலைமை தொடர்பிலும், அது தொடர்பான மற்றெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் கண்டிப்பாக இரகசியத்தைக் கடைப்பிடிப்பதாகத் தம்மைக் கட்டுப்படுத்தி வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும்; அத்துடன்

(அ) (i) சபையினால்;

(ii) ஒரு நீதிமன்றத்தினால்;

(iii) அக்கருமங்கள் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளினால்; அல்லது

(iv) பணச்சபையினால்,

அவ்வாறு செய்யுமாறு தேவைப்படுத்தப்படும்போது;

(ஆ) தமது கடமைகளைப் புரிகையில்; அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதில்,

தவிர, அவரது கடமைகளை நிறைவேற்றுவதில் அவரது அறிவுக்கு எட்டக்கூடிய வேறு எந்தக் கருமத்தையும் வெளியிடமாட்டாரென அத்தகைய வெளிப்படுத்துகை மூலம் தம்மைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

(2) வங்கியின் பணிப்பாளர், கணக்காய்வாளர், அலுவலர், ஊழியர், முகவர் அல்லது அதன் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும், (1) ஆம் உட்பிரிவின் கீழான இரகசியத்தைக் கடைப்பிடிப்பதாகத் தம்மைக் கட்டுப்படுத்திய வெளிப்படுத்துகையை

மீறாமல் கேள்விக்கு விடையளிக்க அவரினால் முடியாவிடின் வங்கித் தொழில் சம்பந்தமான ஏதேனும் கேள்விக்கு விடையளித்தல் ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அவரினால் ஒப்பமிடப்பட்ட ஒரு வெளிப்படுத்துகையை மீறி ஏதேனும் தகவலை வெளிப்படுத்துகின்ற வங்கியின் பணிப்பாளர், கணக்காய்வாளர், அலுவலர், ஊழியர், முகவர் அல்லது அதன் தொழிலில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறு ஆள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மீது ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத ஒரு குற்றப்பணத்துக்கு அத்தகைய குற்றப்பணம் சாதாரண நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் ஒரு நீதிவானால் விதிக்கப்படக் கூடியவாறான ஒரு குற்றப்பணத் தொகையை விஞ்சுவதாக இருப்பினும் கூட, ஆளாதல் வேண்டும்.

39.(1) இச்சட்டத்தின் கீழ் விதிகள் ஆக்கப்படத் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது எவையேனும் கருமங்களுக்காகவும் அல்லது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் வங்கி பயனுறு நிறைவேற்றவும் புரியவும் இயலச் செய்வதற்கு அவசியமான வேறு ஏதேனும் கருமம் தொடர்பிலும் சபை விதிகளை ஆக்கலாம்.

(2) சபையால் ஆக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது வெளியிடப்பட்ட திகதியன்று அல்லது விதிகளில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

40. வங்கியானது -

(அ) 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தனிசு அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும் 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தினதும் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் ஒரு “கடன் வழங்கும் நிறுவனம்” ஆகவிருத்தல் வேண்டும்;

(ஆ) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் ஒரு “வங்கி” ஆகவிருத்தல் வேண்டும் ;

(இ) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் ஒரு “உரிமம் பெற்ற விசேட வங்கி” ஆகவிருத்தல் வேண்டும் என்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட இடத்தில் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் உரிமம் வழங்கப்படுவதாதலும் வேண்டும். உரிமம் பெற்ற விசேட வங்கிகள் தொடர்பில் அச்சட்டத்தின்கீழ் பணச்சபையினால் வழங்கப்படக்கூடிய அத்தகைய எல்லாப் பணிப்புகளுக்கும் அமைந்ததாதலும் வேண்டும்;

(ஈ) (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டத்தின் 47அ என்னும் பிரிவின் கருத்தெல்லையினுள் ஒரு “கடன் வழங்கும் நிறுவனம்” ஆகவிருத்தல் வேண்டும்;

(உ) (89 ஆம் அத்தியாயமான) ஈட்டுச் சட்டம் மற்றும் 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டத்தின் கருத்தெல்லையினுள்ளும் அதன் நோக்கத்திற்காகவும் ஓர் “அங்கீகரிக்கப்பட்ட கடன்முகவர் நிலையம்” ஆக விருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஊ) (433 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தின் 108அ என்னும் பிரிவின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் ஒரு “வங்கித்தொழில் நிறுவனம்” ஆகவிருத்தல் வேண்டும்.

41. வங்கியினால் பெறப்படும் வரவெதுவும் மத்திய வங்கியினால் அது சார்பாகச் செயற்படுத்தப்படும் இயைபான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வரவு உத்தரவாத மேவுகையினால் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

## அபிவிருத்தி வங்கிகளின் தொழிலை உரித்தாக்குதல்

42. (1) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் முரணாக எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வங்கியொன்று தாபிக்கப்பட்டதன் பின் நியாயமான காலத்துக்குள், அமைச்சரானவர் 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின்கீழ் கொண்டு நடாத்த அத்தகைய பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் அதிகாரமளிக்கப்பட்ட தொழிலாகவுள்ள (இச்சட்டத்துக்கான அட்டவணையில் “உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகள்” எனக் குறித்துரைக்கப்பட்ட) பிராந்திய அபிவிருத்தி வங்கிகளினால் தற்போது கொண்டு நடாத்தப்படும் தொழிலை (இதனகத்துப் பின்னர் “கொள்ளும் வங்கி” எனக் குறிப்பீடு செய்யப்படும்)

2 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வங்கிக்கு வர்த்தமானியில் வெளியிடப்படும் ("உரித்தாக்கற் கட்டளை" என இதனகத்துப் பின்னர் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளையினால் அமைச்சரானவர் உரித்தாக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக "பிராந்திய அபிவிருத்தி வங்கியால் தற்போது கொண்டு நடாத்தப்படும் தொழில்" பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) உரித்தாக்கற் கட்டளைத் தேதிக்கு நேர்முந்திய நாளன்று, உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அசைவுள்ள, அசைவற்ற ஆதனம் எல்லாம் (காசுமீதிகள், ஒதுக்கு நிதிகள், முதலீடுகள் அத்துடன் வைப்புக்கள் உட்பட);

(ஆ) உரித்தாக்கற் கட்டளைத் தேதிக்கு நேர்முற்போந்த நாளில் உரித்தாக்கல் வங்கியினால் அல்லது வங்கிகளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தில் அல்லது அதிலிருந்து எழுகின்ற உரிமைகள், தத்துவங்கள், சிறப்புரிமைகள், அதிகாரங்கள் அத்துடன் அக்கறைகள் எல்லாம் அத்துடன் அத்தகைய உரித்தாக்கல் வங்கியினால் அல்லது வங்கிகளினால், அனுபவிக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம் மீதான ஏதேனும் குத்தகை பற்று உரிமைகளும்;

(இ) உரித்தாக்கற் கட்டளைத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உளதாகவிருப்பனவும் உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளுக்கான பொறுப்புகள் எல்லாம்; அத்துடன்

(ஈ) உரித்தாக்கல் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உரித்தாக்கல் வங்கியினால் பேணப்பட்ட அத்தகைய உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் தொழில் தொடர்பான அல்லது அதனோடிணைந்த, புத்தகங்கள், கணக்குகள் அத்துடன் ஆவணங்கள் எல்லாம்.

43. ஏதேனும் அல்லது எல்லா உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் தொழில் கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கிய தேதியிலிருந்து -

(அ) கொள்ளும் வங்கி, உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் உரித்தாக்கப்பட்ட தொழிலைக் கட்டுப்படுத்தலும், உடைமை கொண்டிருத்தலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய உரித்தாக்கல் வங்கியிற் அல்லது வங்கிகளுக்கு உரித்தாக்கப்பட்ட தொழிலின் கைமாற்றம் பெறுபவராக கருதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பிராந்திய அபிவிருத்தி வங்கிகளின் கூட்டிணைக்கப்பட்ட கட்டளைகள் நீக்கப்பட்டவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

44.(1) உரித்தாக்கல் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று ஏதேனும் உரித்தாக்கல் வங்கியினது அல்லது வங்கிகளினது தொழிலின் தேறிய பெறுமதியை நிச்சயிக்கும் நோக்கத்திற்காக, பணச்சபையினது தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரைக் கொண்டு அத்தகைய உரித்தாக்கப்பட்ட தொழிலின் கணக்காய்வொன்றைச் செய்வித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர், பணச்சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதியினுள் பணச்சபைக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், பணச்சபையானது, அறிக்கையைச் சீர்தூக்கிப் பார்த்து, அத்தகைய அறிக்கையை ஏற்கு முன்னர் அவசியமாயின் அது அவசியமெனக் கருதக் கூடியவாறான, அத்தகைய ஏதேனும் மேலதிகத் தகவலை அல்லது விளக்கங்களைக் கொடுத்துதவுமாறு, கணக்காய்வாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

45. (1) வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றினால் வங்கியை உரித்தாக்கும் தேதியிலிருந்து பயனுறுவதாக, 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிகள் சட்டம் நீக்கப்படுதல் வேண்டும்.

(2) உரித்தாக்கல் தேதியிலிருந்து -

(அ) உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளின் உரித்தாக்கப்படட தொழில் பற்றியவையும் அல்லது அது தொடர்பானவையும் உரித்தாக்கற் தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளவையும், உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகள் அதற்கு ஒரு திறத்தவராக உள்ளதும் அல்லது உள்ளவையும் அல்லது உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளின் சார்பில் உள்ளதும் அல்லது உள்ளனவுமான எல்லா ஒப்பந்தங்களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், அற்றோணித் தத்துவங்களும், சட்ட பிரதிநிதித்துவ அளிப்புகளும் அத்துடன் அத்தகைய தன்மையினவுமான ஏனைய சாதனங்களும் கொள்ளும் வங்கியினால், விடயத்துக்கேற்ப செய்துகொள்ளப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள், உறுதிகள், முறிகள், உடன்படிக்கைகள், அற்றோணித் தத்துவங்கள், சட்ட பிரதிநிதித்துவ அளிப்புகள் அல்லது வேறு சாதனங்கள் என்பனவாக உரித்தாக்கல் தேதியிலிருந்து கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளினால் அல்லது அதற்கெதிராகத்தொடுக்கப்பட்டவையும் அத்தகைய வங்கி அல்லது வங்கிகளின் உரித்தாக்கப்பட்ட தொழில் பற்றியவையும் அல்லது அது தொடர்பானவையும் உரித்தாக்கற் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையும் எத்தகைய தன்மையினவையுமான எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும் கொள்ளும் வங்கியினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும்

வழக்கு நடவடிக்கைகளாகவும் இருப்பனவாக உரித்தாக்கற் தேதியிலிருந்து கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தப்படலாம் அல்லது குறை வழக்குத் தொடுக்கப்படலாம்;

(இ) உரித்தாக்கற் தேதிக்கு நேர்முந்திய நாளன்று உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் எல்லாப் பணங்களும் அபிவிருத்தி நிதியத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிதியத்தின் பாகமாதலும் வேண்டும்;

(ஈ) உரித்தாக்கற் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அத்தகைய உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின், ஊழியத்திலிருக்கின்ற உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின், அத்தகைய எல்லா அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் அத்தகைய உரித்தாக்கல் தேதியிலிருந்து பயனுறும் வகையில் கொள்ளும் வங்கியில் அவர்களால் முன்னர் துய்க்கப்பட்ட நியதி நிபந்தனைகளைவிடக் குறையாத அனுகூலமுடைய நியதி நிபந்தனைகள் மீது ஊழியம் முனையப்படுதல் வேண்டும் என்பதுடன்-

(i) அத்தகைய முனைவு ஏற்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் தகைமைகளையும் அனுபவங்களையும் கவனத்திற் கொண்டு கொள்ளும் வங்கி நியாயமெனக் கருதுகின்றவாறான அத்தகைய ஊழிய நியதி, நிபந்தனைகளின்மீது அதில் அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் ஊழியத்திலமர்த்தப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) அத்தகைய முனைவு ஏற்கப்படாதவிடத்து, அத்தகைய அலுவலர்களும் சேவையாளர்களும் 46 ஆம் பிரிவின்கீழ் தீர்மானிக்கப்படுகின்றவாறான நட்டஈட்டுக் கொடுப்பனவிற்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

46. நாற்பத்தைந்தாம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட உரித்தாக்கல் வங்கி அல்லது வங்கிகளின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் மேற்சொல்லப்பட்ட பிரிவின்படி நட்டஈடு செலுத்தப்படுவதற்கு உரித்துடையவராகவ ிருக்குமிடத்து, கொள்ளும் வங்கி, தொழில் ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் செலுத்தப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தீர்மானம், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அத்தகைய அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு இருக்கக்கூடிய ஏதேனும் உரிமைகளைப் பாதிப்பதாகக் கருதப்படுதலாகாது.

47. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

48. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி -

“கடனுதவி” என்பது, எதிர்பாராப் பொறுப்பொன்றை ஏற்றுக்கொள்வதற்கான பாரப்பொறுப்பு உட்பட ஏதேனும் கடன் அல்லது மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது ஏதேனும் கடனை, மேலதிகப்பற்றை அல்லது முற்பணத்தை வழங்குவதற்கான ஏதேனும் எதிர்பாராப் பொறுப்பு என்று பொருளாகும்;

“வங்கித்தொழிற் சட்டம்” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டம் எனப் பொருளாகும்;

“இலங்கை வங்கி” என்பது, (397 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை வங்கி என்று பொருளாகும்;

“வங்கித்தொழில் நிறுவனம்” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு வங்கியெனப் பொருளாகும்;

“மத்திய வங்கி” என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;

“தொழில்முயற்சி” என்பது, கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ் சரி, கூட்டிணைக்கப்படாததாயினும் சரி எத்தன்மையினதான பெயராலும் அல்லது பதவிப் பெயராலும் அழைக்கப்பட்டிருப்பினும் சரி ஏதேனும் ஆட்களின் குழு என்று பொருளாகும் என்பதுடன் தனிக் கூட்டுத்தாபனமொன்றை அல்லது தனி உரித்தாண்மையொன்றையும் உள்ளடக்கும்;

“உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒரு வர்த்தக வங்கியென்று பொருளாகும்;

“உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி” என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட அல்லது உரிமமளிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஒரு கம்பெனி அல்லது நிறுவனம் என்று பொருளாகும்;

“நுண், சிறிய, நடுத்தர தொழில் முயற்சி” என்பது, ஐந்து கோடி ரூபாவுக்குக் குறைவான அசையாச் சொத்துக்களைக் கொண்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம் தொடர்பானது எனப் பொருளாகும்;

“பணச்சபை” என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் பணச்சபை என்று பொருளாகும்;

"தேசிய சேமிப்பு வங்கி" என்பது, 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று பொருளாகும்;

"உரித்தாக்கும் வங்கி அல்லது வங்கிகளின் தேறிய பெறுமதி" என்பது, (44 ஆம் பிரிவின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அறவிடப்படமுடியாத சொத்துக்கள் நீங்கலாக) 42 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் பயனைக்கொண்டு கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் சொத்துக்களின் பெறுமதியிலிருந்து அக்கட்டளையின் பயனைக் கொண்டு கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் பொறுப்புக்களின் பெறுமதியை கழித்துவரும் பெறுமதி எனப் பொருளாகும்;

"மக்கள் வங்கி" என்பது, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கி என்று பொருளாகும்;

"பிராந்திய அபிவிருத்தி வங்கி அல்லது வங்கிகள்" என்பது, 1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, பிராந்திய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட வங்கி அல்லது வங்கிகள் என்று பொருள்படும்;

"உரித்தாக்கப்பட்ட தொழில்" என்பது, உரித்தாக்கல் வங்கியின் அல்லது வங்கிகளின் தொடர்பில் 42 ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்றின் மூலம் அத்தகைய கொள்ளும் வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட வங்கியின் அல்லது வங்கிகளின் தொழில் என்று பொருள்படும்.

### அட்டவணை

1. 1998, ஒற்றோபர் 14 ஆம் தேதிய, 1049/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்ட இராஜரட்டை அபிவிருத்தி வங்கி.

2. 1998, நவெம்பர் 11 ஆம் தேதிய, 1053/10 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்ட ஊவா அபிவிருத்தி வங்கி.

3. 1998, நவெம்பர் 11 ஆம் தேதிய, 1053/10 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்ட சப்பிரகமுவ அபிவிருத்தி வங்கி.

4. 1998, நவெம்பர் 11 ஆம் தேதிய, 1053/10 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்ட வயம்பா அபிவிருத்தி வங்கி.

5. 1998, ஒற்றோபர் 14 ஆம் தேதிய, 1049/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் தாபிக்கப்பட்ட றுகுணு அபிவிருத்தி வங்கி.

6. கந்துரட்ட அபிவிருத்தி வங்கி.

## 2008 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகம் (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

### 1990 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னா் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1990ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, இலங்கை கடன் தகவல் பணியச் சட்டத்துக்கான விரிவுப் பெயர், "கடன் கொடுக்கும் நிறுவனங்களிடமிருந்து" என்ற சொற்களில் தொடங்கி

"அத்தகைய தகவலை ஏற்பாடு செய்வதற்கும்" என்னும் சொற்கள் வரைக்குமான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுக:-

"கடன் கொடுக்கும் நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுவோர், நுகர்வோர் அல்லது கடனளிக்கும் நிறுவனங்கள் தொடர்பிலான கடன் தகவலைச் சேகரிப்பதற்கும், பணியகத்தின் பங்குதாரர்களுக்கும் தகவல் பெறுவதற்கு உரித்துடைய அதிகாரசபைகளுக்கும் நிறுவனங்களுக்கும் வேண்டுகோளின்மீது அத்தகவலை வழங்குவதற்குமாக".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஆம் பிரிவு, "கொழும்பில்" மற்றும் "கொழும்பு" என்னும் சொற்கள் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப் பதிலாக, "மேல் மாகாணத்தில்" மற்றும் "மேல்மாகாணம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவிலுள்ள (vii)ஆம், (viii)ஆம் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(vii) உரிமம்பெற்ற விசேட வங்கிகளின் பணிப்பாளர்கள் சபைகளில் பணிப்பாளர்களாக உள்ளவர்களான ஆட்களிடையேயிருந்து பணிச் சபையால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆள் ஒருவரையும்;

(viii) பங்கு வைத்திருக்கை குத்தகைத் தாபனங்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள் ஒருவரையும்; அத்துடன்

(ix) பணியகத்தின் பொது முகாமையாளர் என்னும் பதவியை வகிக்கின்றவரான ஆளையும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"பணியகத்தின் பணிகள்"

6. பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளுக்கும், குறிப்பாக விதி முறைப்படுத்தப்படாத துறைகளுக்குக் கடன் விநியோகத்தலை வசதிப்படுத்தும் கருத்துடன் பணியகத்தின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) 7அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களின் வகுதிகளிலிருந்து அல்லது ஆட்கள் குழுக்களிலிருந்து கடன் வழங்கு மற்றும் நிதிசார் தகவலைச் சேகரித்தலும், ஒன்றிணைத்தலும், ஒருங்கிணைத்தலும்;

(ஆ) 7ஆ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆட்கள் குழுக்களுக்கு வேண்டுகோளின் மீது கடன்வழங்கு மற்றும் நிதிசார் தகவலை வழங்குதல்;

(இ) கடன்வழங்கு தரப்படுத்தல் என்னும் பணியைப் பொறுப்பேற்றலும், அத்தகைய கடன்வழங்கு தரப்படுத்தல்களை எவையேனும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முகவர் நிலையங்களுக்கு அல்லது அத்தகைய தரப்படுத்தல்களுக்கான வேண்டுகோளொன்றை விடுக்கின்ற எவரேனுமாளுக்கு விற்பனை செய்தல்;

(ஈ) கடன்கொடுக்கும் பணியகத்தின் நிறுவனங்களினதும் கடனளிக்கும் நிறுவனங்களினதும் வேண்டுகோளின் மீது ஆட்களின் கடன்வழங்கு மதிப்பீட்டையும், இலங்கையில் ஏனைய சேர் பெறுமதிச் சேவைகளையும் வழங்குதல்;

(உ) பணியகத்தின் பங்குதாரர்களாகவுள்ள கடன்கொடுக்கும் நிறுவனங்களுக்காகவும் பங்குபற்றுகின்ற கடனளிக்கும் நிறுவனங்களுக்காகவும், ஆராய்ச்சியையும் கருத்திட்டங்களையும் பொறுப்பேற்றல்; அத்துடன்

(ஊ) அரசாங்கத்தினால் அவ்வாறு பணிக்கப்படின், அசைவுள்ளவற்றின் சேம அக்கறையைப் பதிவு செய்வதற்கு, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கோப்பிடுதல் அலுவலகமொன்றைத் தொழிற்படுத்தல்.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(அ) பிரிவு 7அ இல் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்கள் பற்றிய தரவு வங்கியொன்றைப் பேணுதல்;

(ஆ) பிரிவு 7அ இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆட்களுள் எவரிடமிருந்தும் கடன்வழங்கு மற்றும் நிதிசார் தகவலை சேகரித்தலும், ஒன்றியைத்தலும், ஒருங்கிணைத்தலும்;";

(2) அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பதின்வரும் பந்திகளை இடுவதன் மூலமும்:-

"(ஈ) பணியகத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைவாக, 7ஆ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்கு, வேண்டுகோளின் மீது, அந்தரங்கமாகக் கடன்வழங்கு மற்றும் நிதிசார் தகவலை அல்லது அத்தகைய தகவலின் ஏதேனும் வகுதியைக் கொடுத்துதவுதல் அல்லது கடன்வழங்கு மதிப்பீட்டை அல்லது வேறு சேர்பெறுமதிச் சேவைகளை வழங்குதல்

(ஈஈ) பணியகத்தின் கடன்கொணடக்கும் நிறுவனங்களுக்கும் மற்றும் பங்குபற்றுகின்ற கடனளிக்கும் நிறுவனங்களுக்கும் முடிபு ஆதார முறைமைகள் போன்ற மேலதிகச் சேவைகளை வழங்கும் நோக்கத்திற்காக, வர்த்தக வங்கிகளிடமிருந்து காசோலைத் திரும்பல்கள் தொடர்பான தகவலைச் சேகரிப்பதற்குப் பொறுப்பேற்றல்;;

(3) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பதின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(உ) கொடுத்துதவப்படுகின்ற நிதிசார் கடன் வழங்கு மற்றும் தகவலுக்காக அல்லது வழங்கப்படுகின்ற சேவைகளுக்காக, அத்தகைய கட்டணங்களை அல்லது வேறு இறுப்பனவுகளை அறவிடுதல் அல்லது அடையாளங் காணப்பட்டு ஒப்பப்பணமொன்றைச் செலுத்தும்படி தேவைப்படுத்துதல்;;

(4) (க) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(கக) 6ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள பணிகளைப் பயனுற நிறைவேற்றுவதற்காகவும் மற்றும் அதன் தொழிலை நடாத்துவதற்கான ஆதாரச் சேவைகளை வழங்குகின்ற ஏதேனும் தொழில் முயற்சியைக் கொண்டு நடாத்துவதற்காகவும், எவரேனும் ஆளுடனான அல்லது ஏதேனும் கம்பனியுடனான இணைப்புக்காகக் கூட்டு முயற்சிகளுக்கான ஒழுங்கேற்பாடுகளைச் செய்து கொள்ளுதல்

(கக்க)அரசாங்கத்தினால், அத்தகைய அலுவலகத்தைத் தொழிற்படுத்துமாறு பணிக்கப்படின், அசைவுள்ளவற்றின் பிணைய அக்கறையைப் பதிவு செய்வதற்கென, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கோப்பிடுதல் அலுவலகமொன்றைத் தொழிற்படுத்துதல்;";

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை, அச்சட்டவாக்கத்தின் 7அ மற்றும் 7ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும்:-

எந்த ஆட்கள் அல்லது ஆட்கள் குழு தொடர்பில் கடன் வழங்கு மற்றும் நிதிசார் தகவல் சேகரிக்கப்பட முடியுமோ அந்த ஆட்கள் அல்லது ஆட்கள் குழு

7அ. பணியகமானது, இச்சட்டத்தின் கீழ் அதன் பணிளை நிறைவேற்றுகையில் பின்வருவோர் மற்றும் பின்வரும் தொடர்பிலான தகவலைச் சேகரிக்கலாம்:-

(அ) கடன்கொடுக்கும் நிறுவனங்களின் கடன் பெறுவோர் மற்றும் கடன்பெறுவோராக வரவிருப்போர் தொடர்பில், அத்தகைய நிறுவனங்களிடமிருந்து;

(ஆ) கடனளிக்கும் நிறுவனங்களின் நுகர்வோர் மற்றும் நுகர்வோராக வரவிருப்போர் தொடர்பில், அத்தகைய நிறுவனங்களிடமிருந்து;

(இ) காப்புறுதிப்பத்திரங்களை வைத்திருப்போர் மற்றும் வைத்திருப்போராக வரவிருப்போர் தொடர்பில், காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்து, அத்துடன் அத்தகைய காப்புறுதிப் பத்திரங்களின் ஒப்படைப்புப் பெறுமதி மீது அளிக்கப்பட்ட கடன் தொடர்பிலான தகவல்;

(ஈ) ஆட்கள் தொடர்பில், 1968ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க, ஆட்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுள் அடங்குகின்ற ஆட்களைப் பதிவு செய்தல் ஆணையாளரிடமிருந்து;

(உ) குழுமங்களும் பங்காண்மைகளும் தொடர்பில், தொழிற் பதிவுப் பதிவாளரிடமிருந்து; அத்துடன்

(ஊ) கம்பனிகள் தொடர்பில், 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் நியதிகளின்படி, கம்பனிகள் பதிவாளரிடமிருந்து.

7ஆ. (1) பணியகமானது, அதற்கு வேண்டுகோளொன்று விடுவிக்கப்படும் விடயங்களில், அதன் தத்துவங்களைப் பிரயோகிக்கையில், அதற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள கடன் தகவலைப் பின்வரும் ஆட்களுக்கு அல்லது ஆட்கள் குழுவுக்குக் கொடுத்துதவலாம்:-

(அ) எவரேனுமாளின் கடன்பெறு அருகதையை அல்லது கடன்பெறு அந்தஸ்தை மதிப்பீடு செய்யும் அல்லது நிச்சயிக்கும் அத்துடன் ஏற்கனவேயுள்ள கடன்பெறுவோரைப் பரிசீலனை செய்து கண்காணிக்கும் மற்றும் ஏற்கனவேயுள்ள கடன்பெறுவோரின் நிலுவையாகவுள்ள கடனைச் சேகரிக்கும் அத்துடன் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நடைமுறைக் கணக்குகள் திறக்கப்பட்டு பேணப்படும் நோக்கங்களுக்காக, பணியகத்தின் பங்குதாரர்களாகவுள்ள கடன்கொடுக்கும் நிறுவனங்களுக்கு;

(ஆ) ஒரு கடன்கொடுக்கும் நிறுவனத்தின் பணிப்பாளரொருவராக அல்லது பிரதான நிறைவேற்றுலுவலரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு எவரேனுமாளின் பொருத்தமான தன்மையை நிச்சயிக்கும் நோக்கங்களுக்காகவும் மற்றும் கடன்கொடுக்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தும் மற்றும் மேற்பார்வை செய்யும் அத்துடன் அத்தகைய நிறுவனங்களின் கடன் பகுப்பாய்வின் தரத்தை மேம்படுத்தும் நோக்கங்களுக்காகவும் மத்திய வங்கிக்கு;

(இ) உரிமமொன்று வழங்கப்படுவதற்கான அல்லது உரிமமொன்றை வழங்குவதற்கு அல்லது அத்தகைய சலுகைகளை அளிப்பதற்கு ஏற்புடையற்பாலதான சட்டத்தின் நியதிகளின்படி சலுகையொன்று வழங்கப்படுவதற்கான

விண்ணப்பகாரரொருவரின் கடன்பெறு அருகதையை மதிப்பீடு செய்வதற்கென அத்தகைய தகவலைப் பெறுவதற்கு உரித்துடையதென நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் அரசாங்கஞ்சார் முகவர் நிலையத்துக்கு அல்லது நிறுவனத்துக்கு;

(ஈ) எவரேனுமாளின் கடன்பெறு அருகதையை அல்லது கடன்பெறு அந்தஸ்தை மதிப்பீடு செய்யும் மற்றும் நிச்சயிக்கும் அத்தடன் ஏற்கனவேயுள்ள நுகர்வோரைப் பரிசீலனை செய்து கண்காணிக்கும் மற்றும் ஏற்கனவேயுள்ள நுகர்வோரின் நிலுவையாகவுள்ள கடனைச் சேகரிக்கும் நோக்கத்துக்காக, பங்குபற்றுகின்ற கடனளிக்கும் நிறுவனங்களுக்கு;

(உ) கடன்கொடுக்கும் நிறுவனங்களின் கடன்பெறுவோருக்கு மற்றும் கடன்பெறுவோராக வரவுள்ளோருக்கு அல்லது கடனளிக்கும் நிறுவனங்களின் நுகர்வோருக்கு அத்துடன் அத்தகைய தகவல் எந்த வேறு ஆள் தொடர்பானதோ அந்த வேறு எவரேனும் ஆளுக்கு;

(ஊ) அத்தகைய தகவல் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளின் சம்மதத்திற்குகமைவாக சர்வதேசக் கடன்வழங்கு பணியகங்களுக்கு;

(எ) தகவல் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளின் கடன்பெறு அருகதையையும் காப்புறுதியளிக்கப்படக்கூடிய தன்மையையும் பொறுப்பேற்கும் அல்லது நிச்சயிக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய ஆளின் சம்மதத்துடன் ஏதேனும் காப்புறுதிக் கம்பனிக்கு; அத்துடன்

(ஏ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக அமைச்சர், பணச்சபையின் விதிப்புரையின் மீது, காலத்துக்குக் காலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அடையாளங்காணக்கூடியவாறான அத்தகைய வேறு ஆட்களுக்கு அல்லது ஆட்கள் குழுக்களுக்கு.

(2) பணியகமானது, அத்தகைய தகவலைக் கொடுத்துதவுவதில், சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறான, அத்தகைய தகவலானது எந்த நோக்கங்களுக்காக நோக்கங்களை இனங்காணுதல் உட்பட அத்தகைய நியதி, நிபந்தனைகளை விதிக்கலாம்.".

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவு அதன் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(3) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சபையானது -

(அ) பணச் சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் விகிதாசாரப்படி கடன்கொடுக்கும் நிறுவனங்களுக்கு பணியகத்தின் பங்குகளைப் பிரித்தொதுக்கலாம் அல்லது கைமாற்றலாம்;

(ஆ) 6 ஆம் பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான தொழிநுட்பவியலின் முன்னேற்றத்தில் ஈடுபட்டுள்ள எவரேனுமாளுக்குப் பங்குகளைப் பிரதித்தொதுக்கலாம்.

(4) பங்குகளின் ஆரம்ப வழங்குகையின் பின்னர், பணியகத்தின் பங்குகளினது பிரித்தொதுக்குகை அல்லது கைமாற்றுகை, பணியகத்தினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், பணச்சபையின் எழுத்திலான அங்கீகாரத்துடன் செய்யப்படுதலும் வேண்டும்.

(5) மூன்றாம், நான்காம், உட்பிரிவுகளின் கீழ் பணியகத்தின் பங்குகளைப் பிரித்தொதுக்குவதற்கான அல்லது கைமாற்றுவதற்கான அங்கீகாரம் அளிப்பதில், பணச்சபையானது, எல்லா நேரங்களிலும். -

(அ) பணிகத்தின் வழங்கப்பட்ட பங்கு மூலத்தின் பதினைந்து சதவீதத்துக்குக் குறையாததைப் பணச்சபை வைத்திருப்பதனையும்

(ஆ) பணச்சபையினாலும், பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றாகவுள்ள வேறு ஏதேனும் கடன் வழங்கும் நிறுவனத்தினாலும் வைத்திருக்கப்பட்ட கூட்டு மொத்தப் பங்கு வைத்திருக்கை, பணியகத்தின் வழங்கப்பட்ட மூலதனத்தின் ஐம்பத்தியொரு சதவீதத்துக்குக் குறையவிருத்தலாகாதென்பதனையும்; அத்துடன்

(இ) பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றாகவிராத ஏதேனும் கடன் வழங்கும் நிறுவனம் அல்லது (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வேறு எவரேனும் ஆள், பணியகத்தின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் பத்து சதவீதத்துக்கு மேற்பட்டதை வைத்திருத்தலாகாதென்பதனையும்,

உறுதிப்படுத்துதல் வேண்டும்.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"சபையினாலான கடன் பெறுதல்கள்

12. (1) பணியகமானது, காலத்துக்குக்காலம், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளின் மீது, எவையேனும் கடன் கொடுக்கும் நிறுவனங்களிடமிருந்து அல்லது வேறேதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனத்திடமிருந்து பணத்தொகைகளைக் கடன் பெறலாம்.

(2) பணியகமானது, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கிணங்க, பணியகத்தின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக தொகுதிக்கடன்களை அல்லது வேறு பிணையங்களை வழங்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் பணியகத்தினாலான கடன் பெறுதல்கள் எவையும், பணியகத்தின் கூட்டுமொத்தக் கடன்பெறுதல்கள் பணியகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் இரு மடங்கிற்குச் சமமானவொரு பணத்தொகையை எந்நேரத்திலும் விஞ்சுவனவாகவிருந்தால், பெரும்பான்மைப் பங்குதாரர்களின் ஒருப்பாடின்றிச் செய்யப்படுதலாகாது.".

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 19அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும்:-

"சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம்

19அ. (1) பணியகத்தின் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் ஒன்பது மாதங்களினுள், சபையானது, பணியகத்தினது பங்குதாரர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டமொன்றை நடாத்துதல் வேண்டும்.

(2) பணியகத்தினால் முன்வைக்கப்பட்ட ஆண்டறிக்கையும் கணக்குகளும் அக்கூட்டத்தில் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஆண்டுப் பொதுக்கூட்டத்தைக் கூட்டும் முறையும் மற்றும் அக்கூட்டத்தில் அலுவல்களைக் கொண்டு நடாத்துவதில் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறையும் சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சபைதோதானதெனக் கருதுகின்றவாறு வெளியிடப்படுதலும் வேண்டும்.".

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21ஆம், 22ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன:-

"பணியகமானது தகவலைக் கோருதல்.

21.(1) பணியகம் அல்லது அதற்கெனப் பணியகத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாள், எழுத்திலான அறிவித்தல் மூலம், 7அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தை, அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட வேண்டிய அத்தகைய காலப்பகுதியினுள் அவ்வறிவித்தலினால் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய எல்லாத் தகவலையும் ஒன்றில் பணியகத்துக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனுமாளுக்கு கொடுத்துதவும்படி தேவைப்படுத்தலாம்.

(2) 7அ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தைத் தாபிக்கின்ற அந்தந்தச் சட்டங்களில் அல்லது வேறேதேனும் சட்டத்தில் அல்லது அத்தகைய நிறுவனத்துக்கும் கடன்பெறுபவருக்கும் அல்லது நுகர்பவருக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையில் முரணாக உள்ளது. எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான தகவலைக் கொடுத்துதவுதல் அல்லது (1) ஆம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்றைப் பின்பற்றி கொடுத்துதவும்படி தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவலை அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலத்தினுள் கொடுத்துதவுதல் அத்தகைய ஏதேனும் நிறுவனத்தின் கடமையாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டவோர் அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கி அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதில் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அடங்கியுள்ள ஏதேனும் தகவலை, பணியகமானது, இச்சட்டத்தின் கீழ் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அளவு வரையல்லாது வேறுவகையாக வெளியிடுதலோ அல்லது எவரேனும் ஆளுக்குத் தெரிவித்தலோ ஆகாது.

தகவலை வெளிவிடா திருப்பதற்கான கடமை

22.(1) பணியகத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் எவரும், இச்சட்டத்தின் நோக்கத்துக்காவன்றி அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் அவ்வாறு செய்யும்படி தேவைப்படுத்தப்படும்போதன்றி, இச்சட்டத்தின் கீழ்ப் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலை வெளிவிடுதலாகாது அல்லது இச்சட்டத்தின் கீழ்ப் பணியகத்திற்குக் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டை அல்லது வேறு தகவலை ஒரு நீதிமன்றத்தின் முன்னர் அல்லது வேறு நிறுவனத்தின் முன்னர் காண்பித்தலாகாது.

(2) கடன் தகவல் பெறுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் எவரும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகத் தவிர அல்லது அவ்வாறு செய்யும்படி வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் போது தவிர, இச்சட்டத்தின் கீழ்ப் பணியகத்தினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் தகவலை வெளிவிடுதலாகாது அல்லது இச்சட்டத்தின் கீழ்ப் பணியகத்தினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டை அல்லது வேறு தகவலை ஒரு நீதிமன்றத்தின் முன்னர் அல்லது வேறு நிறுவனத்தின் முன்னர் காண்பித்தலாகாது.".

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் “கடன்வழங்கு நிறுவனத்தின்” மற்றும் “கடன்வழங்கு நிறுவனத்தால்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “கடன்தகவல் பெறுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தின்” மற்றும் “கடன்தகவல் பெறுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தால்” என்னும் சொற்களை முறையே இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், அவை அச்சட்டவாக்கத்தின் 26அ, 26ஆ மற்றும் 26இ என்னும் பிரிவுகளாகப் பயனுடையனவாதலும் வேண்டும்:-

“கடன் தகவல் கொடுத்து உதவப் படுவதனைப் பணியகம் இடை நிறுத்துதல்.

26அ.(1) பணியகமானது, பணியகத்திடமிருந்து கடன் அல்லது நிதிசார் தகவலை அல்லது வேறு சேர் பெறுமதிச் சேவைகளைப் பெறுவதற்கு உரித்துடையதாகவுள்ள, 7ஆ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டட ஏதேனும் நிறுவனத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக உள்ள ஆளொருவர், பிரிவு 27இன் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ), (இ) மற்றும் (உ) என்னும் பந்திகளின் கீழ்த் தவறொன்றைப் புரிந்துள்ளாரென்பதற்குப் போதிய எண்பிப்புள்ளதெனத் திருப்திப்படின், அத்தகைய நிறுவனத்துக்கு அத்தகைய ஏதேனும் தகவல் கொடுத்துதவப்படுவதனை அல்லது வேறெவையேனும் சேவைகள் வழங்கப்படுவதனை இடைநிறுவத்துவதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) பணியகமானது, (1)ஆம் உட்பிரிவின் கீழான கட்டளையொன்றை ஆக்குவதற்கு முன்னர், (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்துக்குத் தம்பக்க வழக்கு கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை அளித்தல் வேண்டும்.

(3) மேலே (1)ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் கடன் தகவல் வெளிவிடப்படுவதனை அல்லது அத்தகைய வேறு சேவைகள் வழங்கப்படுவதனை நிறுத்துவதற்குப் பணியகம் முடிவுசெய்துள்ளவிடத்து, பணியகமானது, அத்தகைய பங்குதாரராகவுள்ள கடன்கொடுக்கும் நிறுவனம் பணியகத்தில் பங்குகளை வைத்திருப்பின், சபையினால் தீர்மானிக்கப்படும் பிரதிபயனொன்றுக்காக, பணியகத்தின் பங்கு மூலதனத்தில் அத்தகைய நிறுவனத்தினால் வைத்திருக்கப்பட்ட பங்குகள் எவையேனுமிருப்பின், அவற்றைப் பணச்சபைக்கு உடனடியாக் கைமாற்றும்படி அதனைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

நிதிசார் ஒம்புட்சுமான் பிணக்குகளைக் கேட்டுத் தீர்மானித்தல்

26ஆ. பணியகத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் மற்றும் நிதிசார் தகவலில் அடங்கியுள்ள தகவல் தொடர்பில், பணியகத்துக்கும் 7அ மற்றும் 7ஆ என்னும் பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்துக்கும் அல்லது அத்தகைய தகவல் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளுக்கும் இடையேயானவொரு பிணக்குத் தொடர்பான ஏதேனும் முறைப்பாட்டைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கு நிதிசார் ஒம்புட்சுமான் தனியானதும் புறநீங்கலானதுமான முதன்நிலை நியாயாதிக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்

26இ.(1) விதித்துரைக்கப்பட வேண்டும் என இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, அமைச்சர் பின்வரும் எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றுள் எவை தொடர்பிலும் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) பிரிவு 7ஆ இல் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களினால் பின்பற்றப்பட வேண்டிய நடத்தைக் கோவையைக் குறித்துரைக்கும்;

(ஆ) வெளிவிடப்பட வேண்டிய கடன் மற்றும் நிதிசார் தகவல் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாள் கடன் மற்றும் நிதிசார் தகவல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தகவல் தொடர்பான பிழையான பதிவேறுகளைப் பிணக்கிலிடுவதனையும் மற்றும் செம்மையற்றவையென எண்பிக்கப்படின், அவ் வறிக்கைகளைத் திருத்துவிப்பதனையும் இயலச் செய்வதற்கான நடவடிக்கை முறையை எடுத்துக்கூறும்;

(இ) சபையானது அவசியமெனக் கருதக்கூடியவாறு, கடன் மற்றும் நிதிசார் தகவல் தொடர்பாக பணியகத்தினால் வழங்கப்பட வேண்டிய வெவ்வேறு வகையினவான அறிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய இயைபான விபரங்களைக் குறித்துரைக்கும்; அத்துடன் அத்தகை விதிகளும் ஒழுங்குவிதிகளும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக இருத்தல் ஆகாது;

(ஈ) இச்சட்டத்தின் நியதிகளின்படி பணியகத்துக்குத் தகவலையும் விபரத்திரட்டுக்களையும் கொடுத்துதவுவதில் நிறுவனங்களினாலும் ஆட்களினாலும் பயன்படுத்தப்பட வேண்டிய மாதிரிகளையும் படிவங்களையும் குறித்துரைக்கும்.”.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 27ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதற்கான ஓராம் உட்பிரிவில் -

(அ) அதன் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியை அல்லது ஒழுங்குவிதியை மீறுகின்ற;;

(ஆ) அதன் (ஈ) என்னும் பந்தியில் "பணியகத்தின்" என்னும் சொல்லுக்கப் பதிலாக "பணியகத்தின்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "பணியகத்தின், கூட்டுமுயற்சியின் அல்லது இணைப்பின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அதன் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(உ) பணியத்திடமிருந்து தகவல் பெறுவதற்கு உரித்துடைய பிரிவு 7ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் பணிப்பாளர், அலுவலர் அல்லது சேவையாளர் ஒருவராக இருந்து கொண்டு, அத்தகைய நிறவனத்தால் பணியகத்திடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் கடன் அல்லது நிதிசார் தகவலை, அத்தகைய தகவலை வெளிவிடுவதற்கு இச்சட்டத்தினால் அவருக்கு அதிகாரமளிக்கப்பட்ட நோக்கமொன்றாகவிராத வேறேதேனும் நோக்கத்துக்காக எவரேனுமாளுக்கு வெளிவிடுகின்ற;;

(2) இரண்டாம் உட்பிரிவில் "நூறு ஆயிரம் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) நான்காம் உட்பிரிவில், "27(1)(அ) அல்லது (ஆ) என்னும் பிரிவின் கீழ் தவறொன்றின் புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கவனத்திற் எடுத்துக் கொண்டு ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத பணத்தொகைக்குக் கொண்ட அத்தகைய தவறை இணைக்கலாம்." என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "(1) ஆம் உட்பிரிவின் கீழ் தவறொன்று புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாதவொரு பணத்தொகைக்கு அத்தகைய தவறை இணைக்கலாம்." என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்";

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "இலங்கை வங்கி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"இணையுறுப்பினர்" என்பது, கட்டணங்களைச் செலுத்துதல் தொடர்பான நியதிநிபந்தனைகளின் மீதும், கடன் மற்றும் நிதிசார் தகவலை வெளிவிடுவதற்கும் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்கும் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்கும் பணியகத்துக்குள்ள அதிகாரம் தொடர்பான ஏனைய நியதிகளின் மீதும், பணியகத்துடன் ஒப்பப்பண உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ள பிரிவு 7ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும்;

"கடன்பெறுபவர்" என்பது, ஒன்றில் பயன்படுத்தப்பட்டதாயினும் சரி அல்லது இல்லையாயினும் சரி, ஏதேனும் கடன்கொடுக்கும் நிறுவனத்தினால் ஏதேனும் கடன் வரையறை எவ்வாறுக்கு அளிக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனுமாள் என்று பொருள்படும் என்பதுடன், பின்வருவனவற்றையும் பின்வருவோரையும் உள்ளடக்கும்:--

(அ) ஒரு கம்பனியின் அல்லது கூட்டுத்தாபனத்தின் விடயத்தில், அதன் துணைநிலைக் கம்பனிகளையும் அதன் இணைக் கம்பனிகளையும்;

(ஆ) ஒரு குழுமத்தின் விடயத்தில், சொந்தக்காரரைய் அல்லது அதன் எவரேனும் பங்காளரையும், அல்லது முற்போந்த இரண்டு ஆண்டுகளின் போது பங்காளரொருவராகவிருந்த எவரேனும் ஆளையும்; அத்துடன்

(இ) ஒரு தனியாளின் விடயத்தில், அத்தகைய தனியாள் ஒரு பங்காளராக அல்லது உரிமையாளராகவுள்ள அல்லது முற்போந்த இரண்டாண்டுகளின் போது ஒரு பங்காளராகவிருந்த, ஏதேனும் குழுமத்தையும்";

(2) "மத்திய வங்கி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

"கடன் தகவல்" என்பது, பின்வருவன தொடர்பான ஏதேனும் தகவல் என்று பொருளாகும்:-

(i) எவரேனும் கடன்பெறுபவருக்கு அல்லது ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த கடன்பெறுவோருக்குக் கடன் கொடுக்கும் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் பற்றிய விபரங்கள்;

(ii) எவரேனும் கடன்பெறுபவருக்கு அல்லது ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த கடன்பெறுவோருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக, விடயத்துக்கேற்ப, எவரேனும் கடன்பெறுபவரிடமிருந்து அல்லது ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த கடன்பெறுவோரிடமிருந்து ஒரு கடன் கொடுக்கும் நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட பிணைப் பொறுப்பின் தன்மை;

(iii) கடன்கொடுக்கும் நிறுவனமொன்றின் உறுப்பினர்களுள் எவருக்காகவும் அல்லது அதன் உறுப்பினர்களுள் ஏதேனும் வகுப்புக்காகவும் அதனால் கொடுத்துதவப்பட்ட உத்தரவாதம் அல்லது வேறேதேனும் நிதியடிப்படையிலான வசதி;

(iv) அவரின் சார்பில் அல்லது வேறெவரேனுமாளின் சார்பில் கடன்பெறுவோரினாலும் சார்பில் கடன்பெறுவோரினாலும் நுகர்வோரினாலும் கடன் கொடுக்கும் நிறுவனமொன்றுக்கு அல்லது கடனளிக்கும் நிறுவனமொன்றுக்கு கொடுத்துதவப்பட்ட எவையேனும் உத்தரவாதங்கள்;

(v) கடனளிக்கும் நிறுவனமொன்றினால் நுகர்வோர் ஒருவருக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளின் விபரங்கள்;

(vi) எவரேனும் கடன்பெறுபவரின் அல்லது ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த கடன்பெறுவோரின் அல்லது நுகர்வோரின் ஜீவனோபாயங்கள், முன்வரலாறுகள், கடன் கொடுக்கல் வாங்கல்களின் வரலாறு மற்றும் கடன்பெறு அருகதை;

(vii) காலத்துக்குக்காலம் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு ஏதேனும் கடன்வசதியின் தன்மையை அல்லது கடன்வசதிகளின் வகுப்பைப் பொறுத்து, வரையறுக்கப்பட்ட அல்லது வரையறுக்கபடாத காலப்பகுதிக்கான அத்தகைய கடன் வசதியின் வரலாறு;

(viii) வர்த்தக வங்கியின் எவரேனும் வாடிக்கையாளரின் காசோலை திரும்பிய தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றுக்கு, அத்தகைய காசோலைத் திரும்பல்கள் தொடர்பான விபரங்கள்;

(ix) கடன்வழங்கு கொள்கையை ஒழுங்குள்ள முறையில் ஒழுங்குபடுத்துவதற்கு இயைபாகவுள்ளதெனப் பணியகமானது கருதக்கூடிய வேறேதேனும் தகவல்;

(x) இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றின் போது அரசாங்க முகவர் நிலையமொன்றினால் எவரேனுமாளுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் பற்றிய விபரங்கள்;

(xi) காப்புறுதிக் கம்பனிகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட தவணைப் பணங்களில் செலுத்தப்படற்பாலவையான காப்புறுதிப் பூட்கைகளின் விபரங்கள்;

(xii) கடன் மற்றும் நிதிசார் தகவலைப் பெறுவதற்கு உரித்துள்ள ஏதேனும் நிறுவனத்தினால் விடுக்கப்பட்ட வேண்டு கோள்களின் விபரங்கள் அல்லது அத்தகைய தகவல் எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளின் விபரங்கள்;

(xiii) கடன் வழங்கு மதிப்பீடொன்று.

அத்துடன் ஆளின் பெயர், பிறந்த தேதி அல்லது பிறப்புப் பதிவுத் தேதி, ஆளடையாள இலக்கம், கடந்தகால மற்றும் தற்போதைய முகவரிகள், தொடர்பு கொள்வதற்கான விபரங்களையும், திருமண அந்தஸ்து, வாழ்க்கைத் துணையின் பெயர், கடந்தகால மற்றும் தற்போதைய ஊழியம் தொழில், ஆளின் அடையாளத்துக்கு இயைபான விபரங்களையும் ஏனைய தொடர்புபட்ட தகவலையும் உள்ளடக்கும்;

"கடனளிக்கும் நிறுவனம்" என்பது, கடன்வழங்குகையின் மீது பண்டங்களையும் சேவைகளையும் அல்லது பயன்பாட்டுச் சேவைகளையும் வழங்குகின்றதும் மற்றும் தேசியப் பொருளாதாரத்தின் மீது அத்தகைய பண்டங்களை, சேவைகளை பயன்பாடுகளைக் கடனாக வழங்குவதன் தாக்கத்தைக் கருத்திற் கொண்டு, சபையின் விதப்புரையின் மேல் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் வெளிப்படுத்தப்பட்டதுமான ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும்;

(3) "இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கி விடுவதன் மூலமும்;;

(4) "நிதிக் கம்பனி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

"நிதிக் குத்தகைத் தாபனம்" என்பது, 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட ஒரு நிதிக் குத்தகைத் தாபனம் என்று பொருளாகும்;

"நிதிசார் தகவல்" என்பது, இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்துடன் பதிவு செய்யப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ள, (149ஆம் அத்தியாயமான) வியாபாரப் பெயர்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டவொரு கம்பனியினால் அல்லது வேறு தொழிலினால் பேணப்பட்ட ஐந்தொகை, இலாபநட்டக் கணக்கு, வருமானக்கூற்று மற்றும் ஏனைய கணக்குகள் என்பவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தரவு என்று பொருளாகும்;

"நிதிசார் ஒம்புட்சுமான்" என்பது, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க. கம்பனிகள் சட்டத்தின் கீழ்க் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை நிதிசார் ஒம்புட்சுமான் (உத்தரவாதம்) லிமிற்றெற் என்ற பெயரைக் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கீழ்ப் பதவி வகிக்கின்ற ஆள் என்று பொருள்படும்;

"காப்புறுதிக் கம்பனி" என்பது, 2000ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க, காப்புறுதித்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி என்று பொருள்படும்;

"கடன் வழங்கும் நிறுவனம்" என்பது -

(அ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று

(ஆ) உரிமம்பெற்ற விசேட வங்கியொன்று

(இ) நிதிக் கம்பனியொன்று

(ஈ) நிதிக் குத்தகைத்தாபனமொன்று

(உ) மேலே (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனம் எந்த விசேட நோக்க அமைப்பொன்றின் பங்கு மூலதனத்தின் தொண்ணூறு சதவீதத்தைச் (90 சதவீதம்) சொந்தமாக வைத்திருக்கின்றதோ அந்த ஏதேனும் அமைப்பொன்று;

(ஊ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒரு கடன் கொடுக்கும் நிறுவனமாகவுள்ளதென, அந்நிறுவனத்தின் நிதிசார் நிலையுறுதியைக் கருத்திற் கொண்டு சபையின் விதப்புரையின் பேரில், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டணை மூலம் நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட, கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வேறு நிறுவனம்,

என்று பொருள்படும்;

(5) "கடன் வழங்கும் நிறுவனம்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை நீக்கி விடுவதன் மூலமும்;

(6) "உரிமம்பெற்ற வர்த்தக வங்கி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்"-

"உரிமம்பெற்ற விசேட வங்கி" என்பது, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உரிமம்பெற்ற விசேட வங்கியொன்று என்று பொருள்படும்;;

(7) "இலங்கைத் தேசிய அபிவிருத்தி வங்கி" மற்றும் "தேசிய சேமிப்பு வங்கி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணங்களை நீக்கிவிடுவதன் மூலமும்

(8) "மக்கள் வங்கி" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"பங்குபற்றுகின்ற கடனளிக்கும் நிறுவனம்" என்பது, பணியகத்தின் இணை உறுப்பினராகவிருப்பதற்கெனப் பணியகத்துடன் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ள ஒரு கடனளிக்கும் நிறுவனம் என்று பொருள்படும்

"விசேட நோக்க அமைப்பு" என்பது, பிணைப் பொறுப்பளிக்கும் நோக்கத்துக்காகவும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான செயற்பாடுகளுக்காகவும் மட்டுமே தாபிக்கப்பட்ட, ஒரு நம்பிக்கைப் பொறுப்பு உள்ளடங்கலான கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஒரு குழு என்று பொருள்படும்

"சேர்பெறுமதிச் சேவைகள்" என்பது, அனுமதிக்கப்படத்தக்க நோக்கங்களுக்காகக் கடன் தகவலைப் பெறுவதற்குத் தகவுடைய நிறுவனங்களினால் அத்தகைய தகவல் பயன்படுத்தப்படுவதனை வசதிப்படுத்தும் நோக்குடன் அல்லது நிகழக்கூடிய கடன் மோசடிகளையும் தவணை தவறுகளையும் குறைக்கும் நோக்குடன், இச் சட்டத்தின் 7அ என்னும் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி சேகரிக்கப்பட்ட தகவலைப் பயன்படுத்துவதன் மூலம் மேலதிகத் தகவலை அல்லது புள்ளி விபரங்களை வழங்குதலும் மற்றும் புள்ளி விபரஞ்சார் அல்லது சந்தைப்போக்குப் பகுப்பாய்வு அறிக்கைகளை வழங்குதலும் என்று பொருளாகும்.".

16. இச் சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.